# பாரதமணி

ஆசிரியர்
கே. எஸ். வெங்கடரமணி

சுபானு ௵
ஆடி ௴

விலை அணா 4

JULY
1943





# குழந்தைகளுக்கு ஆரோக்யம் அளிக்கிறது

எதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம்பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினல் ஏற்பட்ட தாங்கொணுத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியானசிகித்சை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வாராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.

# கிரைப் சிரப்

கவர்மெண்டு
இண்டஸ்டிரியல் & டெஸ்டிங்
லேபாடரி, மல்லேசுவரம், பெங்களூர்.

ஏஜண்டுகள்:- மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்,
தபால் பெட்டி 63, மதராஸ்.




ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
45, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

| மாலை 10 | JULY 1943 :: சுபானு ஆடிமீ | முத்து 1 |
|---|---|---|


# பொருளடக்கம்


| | விஷயம். | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | குற்றமில்லாப் பிரளயம் | .... | டி. எஸ். ராமாநுஜம், லண்டன். | 2 |
| 2 | குற்றவாளி யார்? | .... | 'பௌராணிகன்' | 6 |
| 3 | கண்டோர் சிதையை! | .... | வே. நாராயணன், மயிலாப்பூர். | 9 |
| 4 | அகிலபாரதீய கலாசங்கம் | .... | கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 13 |
| 5 | பரிதி நிறமாலை அல்லது சோலார் ஸ்பெக்டரம் | .... | டி. பி. நவநீதகிருஷ்ணன் | 14 |
| 6 | பால்காரி செல்லம் | .... | எஸ். குஞ்சிதபாதம் | 16 |
| 7 | உணவுப்பொருள் அபிவிருத்தி | .... | கே. வி. சுப்ரமணிய அய்யர் | 20 |
| 8 | மாந்தம் | .... | டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி | 26 |
| 9 | சிறுவர்பகுதி:— கழுவுக்கேற்ற கோமட்டி | .... | ய. மஹாலிங்க சாஸ்திரிகள் | 29 |
| 10 | தென்னைமரம், பனைமரம் | .... | ராமநாத சர்மா | 31 |



"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# குற்றமில்லாப் பிரளயம்

டி. எஸ். ராமாநுஜர், எம். ஏ., எல். எல். பி. (லண்டன்)

எங்கு பார்த்தாலும் கலியுகம் முடியப் போகிறதென்ற பேச்சு விளையாடி வருகிறது. வரும் ஆகஸ்ட் மாதம் முதல் தேதி யன்று முடிகிறதென்று இந்தியப் புராணங்களும், இஸ்லாமியப் புராணங்களும், கிருஸ்துவப் புராணங்களும் கூறுகின்றனவாம். நமது முன்னோர்கள் தீர்க்கதரிசிகளாகையால் மச்சிய புராணம், வாயு புராணம், விஷ்ணு புராணம் முதலிய நூல்களில் நடந்த விஷயங்கள் மட்டுமல்ல, நடக்கப்போகும் விஷயங்களைப்பற்றியும் கூறியிருப்பது ஓர் அதிசயமாகுமா? அவர்களுக்கு ‘டெல்லஸ்கோப்’ ‘டெலிவிஷன்’ தூரதிருஷ்டிக் கருவிகள் ஒன்றும் கிடையாது. ஞான திருஷ்டியினாலேயே அவர்கள் எல்லாவற்றையும் அறிந்தார்கள். தற்கால நாகரீகமென்று சொல்லப்படும் மோகரீகத்தில் ஆழ்ந்து கிடக்கும் விக்ஞான சாஸ்திரிகள் தூர திருஷ்டிக் கண்ணாடியை வைத்துக்கொண்டு சிவபிரானின் நெற்றிக்கண்ணுடன் போட்டி போடுவது காப்பிக்கும் பழையதிற்கும் ஏற்பட்ட சண்டைபோல் தோன்றுகிறது. யார் ஜெயிப்பார்கள் என்பதைப் பற்றிச் சந்தேகமும் வேண்டுமா? யுகம் முடிவதுடன் மனுவும் கல்பமும் முடியப் போகிறதாம். பிரம்மாவுக்கு 50 வருஷங்கள் முடியவே சுவேதவராக கல்பம் முடிந்து பிரம்ம கல்பம் ஆரம்பிக்குமாம். தற்காலம் ஆண்டுவரும் வைவஸ்வத மனு போய் சூரியசாவருணி என்ற புது மனு வேலைக்கு வருவாராம். இவ்விதம் பெரிய மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் பூமிக்கு யாதொரு ஆபத்தும் வராதாம். இப்பிரளயத்தைக் குற்றமில்லாப் பிரளயமென்று கூறவேண்டுமாம். சிலர் செப்டம்பர் 23-ம் தேதிதான் மேற்கண்ட மாறுதல்களின் ஆரம்பம் என்கிறார்கள். அத்தினத்தின் விசேஷம் பகலும் இரவும் சமமாக இருப்பதே. எதுவானாலும் நாம் இரண்டு மாதத்திற்குமேல் காத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் அதற்குள் அரிசி நிலை என்ன ஆகுமோ சொல்ல முடியாது. கோள்களை ஆராயும் ஜோதிட நிபுணர்கள் ஒரு மஹா பஞ்சம் வருமோ என்று அஞ்சுகிறார்கள். நித்தியப் பட்டினிகள் நிறப்பிய நமது நாட்டில் கவலைக்கிடமில்லை. இரண்டுமாதம் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தால் பசியில்லா வரம் பெற்றுவிடலாம்.

## செத்தார் எழுவார்

மேற்கண்ட மாறுதல்களின் பயனாக செத்தார் எழுவாரென்று பல கிருஸ்துவ கோஷ்டிகளும், சன்மார்க்க சபைகளும், யோகாலயங்களும் சங்கநாதம் செய்து கொண்டிருக்கின்றன. தாரண அல்லது பார்த்திப வருஷத்திலிருந்து பிறக்கும் குழந்தைகளெல்லாம் பூர்வ ஜென்ம வாசனையுடன் நம்மாழ்வார்களாய்ப் பிறக்குமாம். ‘புனரபி ஜனனம், புனரபி மரணம்’ என்ற சுழல் நின்று, பிறந்தவர்கள் சாகாமலும், செத்தவர்கள் மறுபடியும் யோனிகளில் புகாமலும் சுயம் பூக்களாய்த் திரும்பி வந்துகொண்டுமிருப்பார்களாம். மஹாபலி, விபீஷணன், ஹநுமான், மார்க்கண்டன் முதலியவர்களைச் சிரஞ்சீவிகளென்று சொல்லுகிறோமே; அவர்கள் சிரஞ்சீவிப் பட்டம் வாங்கும்போது தூல சரீரத்துடன் கண்ணுக்குப் புலப்பட்டார்களே; இன்று ஏன் அவர்கள் அவ்விதம் புலப்படவில்லை? இரண்டு வருஷத்திற்குள் அழியா உடலைப் பெறும் மர்மவித்தை மனிதனுக்குப் புலப்படுமாம். 100 வயதுள்ள பிரம்மா, முதல் 50 வருஷங்களில் தூங்கியும், பின் 50 வருஷங்களில் விழித்துக்கொண்டுமிருப்பாராம். அதையொட்டி இது வரையில்

நடந்த சுவேதவராக கல்பத்தில் நாம் பிரம்மாவின் தூக்கமாகிய மாயையில் அகப்பட்டு முழித்தோம். இனி நடக்கப் போகும் பிரம்ம கல்பத்தில் நாம் பிரம்மாவின் ஊக்கத்தில் அகப்பட்டு விழிப்போம். இனி நாம் அடையும் தூக்கம் 'தூ' (பரிசுத்தமான) ஊக்கமாகவே இருக்கும். 'தூங்காமல் தூங்கி சுகம்பெறுவதெக்காலம்' என்ற சித்தர்களின் அழுகை இனி ஓய்ந்துவிடும் போலும். இவ்விதம் ஊண், உறக்கமின்றி மனிதர்கள் வாழ நேரிட்டால் இப் மண்ணுலகமே விண்ணுலகமாகிவிடு மல்லவா? பிறகு மனிதர்களும் அமரர்போல் இமை கொட்டாமல் இருப்பார்களா என்ற கேள்வி பிறக்கிறது.

### கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே!

ஒரு மனிதன் தாராளமாக உட்கார்ந்தும் படுத்தும் இருக்கக்கூடிய கண்ணாடிப் பெட்டியைத் தயார்செய்வோம். அதை மூடினால் வெளிக்காற்று உள்ளே போகாமலும் உள்காற்று வெளியே வராமலும் இருக்கவேண்டும். இனி மேல் பிழைக்கமாட்டான் என்ற ஒரு நோயாளியை அதில் போட்டு மூடி விடுவோம். வெளியில் உட்கார்ந்து கொண்டு கண்ணாடி மூலமாய் உள்ளே நடக்கும் விசித்திரங்களை இரவும் பகலுமாய் கவனித்து வருவோம். நோயாளி இறந்து 20-ம் நாள் பிறகு ஒரு மண்டலம் அதாவது 40½ நாட்களுக்குள்ளே பிரேதம் சற்று அசையும். கொஞ்சம் கொஞ்சமாய் தூக்கம் கலைந்து அதன் கண் திறக்க ஆரம்பிக்கும். அச்சமயம் நாம் பெட்டியைக் கொஞ்சம் கொஞ்சமாய்த்திறந்து வெளிக்காற்றை உள்ளே விடுவோம். கூடிய சீக்கிரம் செத்தவன் பிழைத்து அன்றுபிறந்த குழந்தைபோல் கடிக்கிறான். அவனுக்குப் பால் ஊட்டி மற்ற உதவிகளையும் செய்துவந்தால் அவன் மறுபடியும் வளருகிறான். அவன் கண்விழித்த சமயத்தில், அதாவது நாம் வெளிக்காற்றைக் கண்ணாடிப் பெட்டிக்குள்ளே விட்டசமயத்தில், அவன் பிறந்தானென்று வைத்துக்கொண்டு அவன் ஜாதகத்தைக் கணித்தால் அவன் ஆயுர் பாகம் துலங்கும். எப்படி இரு கற்களைச் சுண்ணாம்பு இணைத்து வைக்கிறதோ அதுபோல உடலையும் உயிரையும் லிங்க கோசமென்பது இணைத்து வைக்கிறது. இறந்ததும் உயிர் உடலை விட்டுப் பிரிகிறது. பெட்டிக்கு வெளியே காற்று போகமுடியாததால் பெட்டிக்குள்ளேயே உயிர் சஞ்சரித்து உடலில் புகுந்து ஹிருதயத்தில் இணைகிறது. உடனே தூக்கம் கலைகிறது. பிறகு கண் திறக்கிறது. மனிதஉடலில் கூத்தாடும் மூன்று மலங்கள், அல்லது மாயைகளான "கண் கொட்டுதல்," "தூக்கம் வருதல்," "உயிர் பிரிதல்" இவ்விதம் நடமாடுகின்றன. நாம் நமது கண் மூடியும் திறந்தும் வருவதைக் கவனித்தால் புருவமத்தியில் அவ்வேலையைச் செய்யும் சூக்ஷ்ம யந்திரத்தை அறியலாம். அதுவே பிடரியில் தூக்கத்துக்குக் காரணமாயுள்ள யந்திரத்தைத் தெரிவிக்கும். அதுவே ஹிருதயத்தில் உயிர் பிரிவதற்குக் காரணமாயுள்ள யந்திரத்தைத் தெரிவிக்கும். இம் மூன்று யந்திரங்களில் நமது கவனம் ஓடவே, நாம் இறப்பற்று, உறக்கமற்று, கண்ணிமைக்காமல் இப் பூலோகத்திலேயே தூலத்துடன் அமரர்களாக வாழ முடியும். பிறகு நமக்குப் பசி, பிணி, மூப்பு, என்ற அவஸ்தைகளும் கிடையா. "கண்மூடித்தனமாய் நடக்கிறாயே," "இன்று தான் உனக்குக் கண் திறந்தது போலும்" என்ற சாமான்யப் பேச்சின் சுவாரஸ்யம் இப்பொழுதாவது புரிந்ததா?

### மஹத்தான வால்நீட்டி வருகும் கேது

மேற்கண்ட கண்ணாடிப்பெட்டி வாயிலாய் ஒருவன் பிழைத்து மறுபடியும் இறந்தால் அவனை இரண்டாம் தடவை அவ்விதம் உயிர்மூட்ட முடியாது. ஏனெனில் தற்சமயம் இயற்கையாய் மனிதனுக்கு அமைந்திருக்கும் லிங்க கோசம் வலுவு குன்றியது. திருவிளையாடல் புராணத்திலும் மற்றநூல்களிலும் நாயன்மார்கள் செத்தவர்களைப்

பிழைக்க வைத்திருக்கிறார்களென்று காண்கிறோம். ஆனால் அவ்விதம் பிழைத்தவர்கள் எவ்வளவு வருஷம் உயிருடன் இருந்தார்கள் என்ற தகவல் எங்கும் கிடைக்கவில்லை. நமது கண்ணாடிப் பெட்டி முறையில் செத்துக்கிளம்பும் மனிதனுடைய ஜாதகத்தைக் குறித்து அவன் ஆயுளை நிர்ணயிக்க வழிசொன்னோம். அவன் மறுபடியும் அழியாமல் தூலத்துடன் இருப்பதற்காக லிங்க கோசத்தில் செய்யவேண்டிய வேலைக்குப் போதுமான ஞானத்தையும் சக்தியையும் ஒரு தூமகேது ஆவணி புரட்டாசி மாதத்தில் நமக்குக் கொடுக்கப் போகிறதாம். அது சென்ற தை மாதமே தலையைக்காட்டி, சப்தரிஷி மண்டலம் வழியாய் ஓடி, மறைந்தது. அது மறுபடியும் தென்பட்டு, வாலைநீட்டி, பூமியைத்தொட்டு, குறையா ஞானத்தையும் அழியா ஆவிச்சத்தையும் கொட்டப் போகிறதாம். தேவகுரு என்கிற கிரகத்தால் அந்த வால் வெள்ளி பின் இழுபட்டு மறைந்தது. அசுரகுரு என்கிற சுக்கிரனால் முன் இழுபட்டு அது மறுபடியும் கண்ணுக்குப் புலப்படுமாம். அதனால்தான் அதை சுக்கிரன் பெயராகிய பளிங்கன் என்ற பெயரினால் நமது முன்னோர்கள் அழைத்திருக்கிறார்கள் போலும். 2520 என்பது சுக்கிரனின் எண்ணிக்கை. 1முதல் 9வரையில் உள்ள அஸ்திவார எண்களால் 2520ஐ வகுத்தால் மிச்சம் வராது. அந்த தூமகேது 2520 வருஷங்களுக்கொருதடவை தோன்றும். கலியுக ஆரம்பத்தில் தோன்றி சிவன் அல்லது ஆத்ம வித்தையை அது பூமிக்குக் கொடுத்ததாம். புத்தன் காலத்தில் இரண்டாம் தடவை தோன்றி விஷ்ணு என்ற உடல் வித்தையைக் கொடுத்ததாம். இப்பொழுது மூன்றாம் தடவை தோன்றி பிரம்மா என்ற சிருஷ்டி வித்தையைக் கொடுக்குமாம். பிறகு மனிதன் பரிபூரண ஞானம் பெற்று எவ்விதத் த்துவேஷமும் அற்று அன்பாகி, ஆனந்தமயமாகி, பிரம்மத்துக்கு ஒப்பான பதத்தை அடைகிறான். எப்படிக் குளவி ஒரு பூச்சியைக் கொட்டிக்கொட்டிக் குளவியாக்குகிறதென்று பாமர ஜனங்கள் நினைக்கிறார்களோ, அது போல பிரம்மம் மனிதனை ஞானபாகமாய்க் கொட்டிக் கொட்டித் தன்மயமாக்கிக் கொள்கிறது. 'உலகமனைத்தும் ஒரு உயிரே, ஜீவராசிகளெல்லாம் வெளியில் வேற்றுமை யடைந்தாலும் உள்ளே ஒற்றுமைப்பட்டிருக்கின்றன,' என்ற அறிவு நமது மனதில் குடிகொண்ட உடனே எம்மதமும் சம்மதமாகும். நமக்கு பிரம்மதுல்யம் என்ற மோக்ஷபதம் இப் பிறப்பிலேயே இம் மண்ணுலகிலேயே இத்தூல உடலுக்கே கைகூடும்.

## துவேஷம் இரண்டொழிய வேறில்லை

பிரம்மத் துவேஷம் என்றும் பிராம்மணத் துவேஷம் என்றும் இருவகைத் துவேஷங்கள் உள. எல்லா உயிர்களும் ஒன்றே என்குமிடத்தில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை ஜாதி, மதம் என்ற எவ்விதக் காரணத்தாலோ, வெறுத்தால் அது பிரம்மத் துவேஷமாகும். பிராம்மணன் அல்லது பார்ப்பான் என்ற பதத்திற்கு யமன், அந்தகன், சனி என்ற பொருளுண்டு. சோதிக்குமிடம், சோதி இருக்குமிடம் இவற்றைச் சுட்டிக் காட்டும் சிறந்த சோதிட நூல்களில் அப்பொருளே அப்பதத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யமனை உதைத்துத் தன் மக்களான மனிதர்களை யெல்லாம் எப்பொழுதும் 16-வயது யுவனாயுள்ள மார்க்கண்டன்போலச் செய்யக் கவலையும் ஆசையும் பிரம்மமான சர்வேசுவரனுக்குத்தான் இருப்பதால், அவனுக்கே பிராம்மணத் துவேஷி, அதாவது யமனை வெறுப்பவன், என்ற பட்டம் தகும். சுயமரியாதையைப் பாராட்டும் பெரியார்கள் பிராம்மணத் துவேஷிகளல்ல, அவகர்ள் பிரம்மத் துவேஷிகளே. அது போல பிராமணர்கள் என்று சொல்லிக்கொண்டு பல மக்கள்களைத் தாழ்த்தி நடக்கும் ஆசாரங்களையும் மனோபாவங்களையும் கையாண்டுவரும் பார்ப்பனர்களும் பிரம்மத் துவேஷிகளே. ஒரு தேசத்தோர் மற்றொரு தேசத்தோரை வெறுப்பினும் பிரம்மத் துவேஷிகள்

ஆவார்கள். இவ்விதம் பிரம்மத் துவேஷம் நிறம்பிய இவ்வுலகில் பிரம்மமே வால் வெள்ளி என்ற ஜோதி சொரூபமாய்த் தோன்றி, முன்னொருநாளில் கோகுலத்தில் உதித்த கிருஷ்ணபகவான் போல் உலகம் தாங்கி, அந்தந்த சமயத்தாருக்கும் பொருத்தமாய்க் காக்ஷி தந்து, இதுவே கிருஷ்ணன், இதுவே அல்லா, இதுவேபுத்தன், இதுவேகிருஸ்து என்று சொல்லும் வண்ணம் நமது மனதில் இறங்கும்பொழுது, நாம் பிரம்மத் துவேஷத்தை முற்றிலும் விட்டு, பிராமணத் துவேஷத்தை, அதாவது அவனியில் அழிவது ஆகாது என்ற கொள்கையைக் கையாண்டால், கஷ்டமில்லாமல் புது உலக ஏற்பாட்டில் அமரலாம். இல்லாவிடில் பலவிதக்கஷ்டங்களைப்பட்டு கடைசியாகத்தான் அந்த பிரம்மம் தங்கின பரிசுத்தமான ஓர் இடத்தை நமது மனதில் அறிந்துகொள்ள முடியும்.

இவ்வுபதேசத்தைப் படித்துப் பலர் சிரிக்கலாம். ஆனால் அதை மனதில் கொள்ளாமல் இருப்பாரேயானால், இன்னும் இரண்டு மாதங்களில் அவர்கள் சிரிப்பதுடன் சிரிப்பாய்ச் சிரிப்பார்கள் என்று அஞ்சுகிறேன்.

1939-ம் வருஷத்திலிருந்து இப்பொழுது வால்நீட்டப் போகும் பனிக்கனைப்பற்றிப் பிரசாரம் செய்துவருகிறேன். அதையொட்டிப் பலர் என்னை, "எப்பொழுது சண்டை முடியும், எப்படி முடியும்" என்று கேட்பதுண்டு இனி மேலாவது அக்கேள்விகளைக் கேட்க மாட்டார்களென்று நம்புகிறேன். பிரம்மத் துவேஷம் இவ்வுலகில் என்று வேருடன் அழிகிறதோ, அன்றுதானே சண்டைகளும் சச்சரவுகளும் ஓயும்!

---

# ஏழாவது இலேசுக் குதிரைப் படை

## (7th LIGHT CAVALRY)

எல்லோராலும் விசேஷமாகப் பாராட்டப்பெறும் முறையில் தாராள நன்கொடையாக அளிக்கப்பட்ட ஐந்து கவசக்காரர்களுக்காகவும் (Armoured Cars) பத்தொன்பது கவசத்தாக்கிகளுக்காகவும் (Armoured Carriers) பலதிறப்பட்ட படைகளின் சார்பாக என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்க எழுதுவது எனக்கு அதிகக் கௌரவமாக யிருக்கிறது. "மதராஸ் குதிரைப்படை" என்று மதராஸ் சேனையில் முதலில் இருந்து இப்பொழுது "சென்னை குதிரைப் படை" என்று பட்டம் பெற்றது அதிகப் பெருமையாக இருக்கிறது. இப்பொழுது தங்களுடைய தாராள நன்கொடையால் எங்களுடைய சகலவிதமான பழைய சம்பந்தங்களும், ஞாபகங்களும் புதிய பலம் பெற்று விளங்குவதோடு இந்தக் கவசங்கள் இனி சென்னை மாகாணத்து சில வகுப்பாளர் பெயரால் பெருமதிப்போடு நல்ல தொண்டில் ஈடுபடும் எண்ணத்தையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

# குற்றவாளி யார்?

**"பௌராணிகன்"**

"இப்படிப் பேசிப்பேசித்தான் இந்தக் கதிக்கு வந்திருக்கிறோம். இந்தப்பாழும் பேச்சும் வேதாந்தமும் எப்பொழுது தான் ஓயுமோ?" என்று கேட்டுக் கொண்டே பரஞ்சோதிப்பிள்ளை சிறுவூர் திண்ணை மகாநாட்டினுட் புகுந்தார். சட்டுபுட்டென்று ஏதாவது உருப்படியான காரியத்தைச்செய்ய வேண்டும். அப்படிக்கின்றி எங்குபார்த்தாலும் வாய் வேதாந்தம் பேசுகிறவர்களும், கட்டின வீட்டிற்கு பழுது சொல்லுகிறவர்களும், போகாத ஊருக்கு வழி சொல்லுகிறவர்களுமே நிறைந்திருப்பதைப்பார்த்து ஆத்திரமடைந்துதான் இவ்விதம் படபடப்புடன் வார்த்தைகளைக் கொட்டினார். பிரசங்கி ஆறுமுகநாயக்கரிடம் மிக்க பக்தியுள்ளவர். ஆகையால் அவர் குறித்தது மற்றைய வீணர்களைப் பற்றித்தான். நாயக்கரும் சாந்தமாக பிள்ளையவர்களைப் பார்த்து "குற்றவாளி யார்?" என்றார். எதிர் பாராத இக்கேள்விக்கு பதில் சொல்ல அவர் சிறிது தயங்கவே மேலும் கூறலானார் நாயக்கர். "சுலபத்தில் பதில் சொல்ல முடியாதுதான். ஆகினும் ஒவ்வொருவரும் ஆராயவேண்டியது மிக்க அசியவம். நாம் தற்பொழுது அடைந்திருக்கும் துர்தசைக்கு யார் பொறுப்பாளி என்று".

**பரஞ்:** அவசியந்தான். எங்கு பார்த்தாலும் சத்தியத்தில் நிராசையும், நேர்மையில் அவநம்பிக்கையும், உழைப்பில் ஓர் வெறுப்பும், வஞ்சிப்பதையே ஓர் கலை என்று போற்றுவதும், உரிமை காப்பாற்றிக்கொள்ளுபவர்களுக்கே என்னும் விதவிதமாகப் பேச்சிலும் நடத்தையிலும் மிளிர்ந்திருக்கும் இந்நாளில் வெறும் பேச்சினாலாவதுண்டோ காரியம் என்று தான் கேழ்க்கிறேன். நாம் முன்னுக்குவா ஏதாவதொன்று செய்ய வேண்டாமா? மந்திரத்தில் மாங்காய் விழுமா?

**ஆறு:** நீங்கள் சொல்லுவதெல்லாம் சரியே. உலகம் ஏற்பட்ட காலத்தில் சத்யயுகமிருந்தது. இப்பொழுது இவ்வித அசத்திய மயமானதேன்? இவ்விதம் நேரிடப் பெரும் குற்றம் ஏதாவது நிகழ்ந்திருக்கவேண்டும். அக்குற்றம் யாது? குற்றவாளி யார்?

**பரஞ்:** யாதாயிருந்தாலென்ன? யாராயிருந்தாலுந்தானென்ன? இப்பொழுது செய்யவேண்டியதைக்கேட்டால் நீங்களும்கூட வேதாந்த விசாரணையிலிறங்குகிறீர்களே! கேழ்ப்பதற்கு ஆனந்தமாகத்தான் இருக்கிறது. அன்றைக்குக்கூட வேலைக்கும் கூலிக்கும் வ்யாக்யானம் செய்து அரசாங்கம் வந்த வரலாறு கூறினீர்கள். கேழ்க்கும்பொழுது வெகு நன்றாகப் புரிந்தது. பிறகு உலகத்தைத் திரும்பிப் பார்த்தால் தாங்கள் கூறுகின்ற அரசாங்கம் மானசலோகத்திலே தானோ என்று கேழ்க்கத்தோன்றுகிறது. தயவு செய்து இப்பொழுது செய்ய வேண்டியதைச் சொல்லுங்கள்.

**ஆறு:** அதுதான் சொல்லவந்தேன் கவனித்துக்கேளும். அன்றையதினம் நன்றாகப் புரிந்த விஷயம் ப்ரத்யக்ஷத்தில் நடக்கமுடியாதென்றால் அதற்குப் பொறுப்பாளி யார் என்றுதான் கேட்டேன். சத்யயுகம் எவ்வாறு மறைந்தது? இதையறிந்தாலொழிய மறுபடியும் சத்யயுகத்தையடைய முடியாது. வீணர்களும் பேசுவார்கள் காரியவாதிகளும் பேசுவார்கள். பதட்டமுறாமல் பகுத்தறிய வேண்டும். நாம் எவ்விதம் துர்தசையை யடைந்தோமென்பதை யறியாமல் நம்மைச் சீர்திருத்திக்கொள்ள முடியாது. களை இன்னதென்றறியாது அவசரத்தில் காரியம் செய்தால் களைபிடுங்க முடியாது. பயிரையும் களை யென்றே பிடுங்கிவிடுவோம். எவ்வளவோ மேதாவிகள் இதுகாறும் உடல்பொருள்

ஆவி இவைகளைத் தேசத்திற்கென்று இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு பரியாதை செய்கிறோம். ஆனால் அவர்களில் பலர் ஆத்திரத்தில் தேசத்திற்குழைத்து "அவசரக் கோலம் அள்ளித் தெளித்தேன்" என்ற விதத்தில் காரியங்களைச் செய்தார்களென்பதையும் நாம் மறக்கக் கூடாது. ஆகவே சற்று யோசித்துப் பதில்சொல்லும் குற்றவாளியார் என்று.

**பரஞ்:** பதில் என்ன? எல்லாம் காலகதிதான். எனக்கொன்றும் புரியவில்லை. பெரும்பெருந் தலைவர்களெல்லாம் ஏதோ சொல்லுகிறார்கள். அறியாமை என்கிறார்கள். அன்னிய அரசாங்கம் என்கிறார்கள். அநுபவமில்லாததே என்கிறார்கள். அதிர்ஷ்டஹீனர்கள் என்கிறார்கள் பலர். பத்திரிகைகளைப் பார்த்தால் ஒன்றும் பிடிக்கவில்லை. மகாநாடு கூடுகிறது. அக்கிராசனப்ரசங்கம். காரசாரமான தீர்மானங்கள். விவாதங்கள். தீர்மானங்கள் நிறைவேறியதும் வந்தனோபசாரங்கள். மகாநாடு கலைகிறது. பிறகு சிலவாரங்களுக்குள் மீண்டும் உபசரணை சபை. நிதி வசூலிப்பது. மகாநாட்டுக்கான ஏற்பாடுகள். மீண்டும் அக்கிராசனப் பிரசங்கம் முதலியவைகள். மீண்டும் வந்தனோபசாரங்கள். எனக்கென்னமோ இவைகளெல்லாம் பிடிக்கவில்லை. கிராமத்தில் பகலெல்லாம் வம்பளந்து இரவு தூங்கி மீண்டும் கூடுகிறோமே வம்பளக்க, அதேமாதிரித்தானிருக்கிறது. தேசமாகிற கிராமத்தில் இரண்டு அயனங்களும் பகல் இரவு என்று வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வளவுதான் வித்தியாசம். இந்தஜனங்களைத் திருத்தமுடியாது. தொண்டு செய்வது எவ்வாறு?

**ஆரு:** கவலைப்படாதேயும். தொண்டாற்றத் தொண்டன் ஜனங்கள் சீர்திருந்துகிறார்களா என்று கவனித்துக் காத்திருக்க மாட்டான். சமூகத்திலுள்ள களையைப் பிடுங்கி எறிய ஆராய்ச்சி செய்து முயற்சிப்பதே அவன்தொண்டு. சீர்திருத்தம் தானே ஏற்படும். ஸ்னானம் செய்வோர் அலை ஓயக்காத்திருப்பதில்லை. அவ்விதமே நிஷ்காம்யகர்மம் என்கிற கர்மயோகத்தில் மூழ்கி ஸ்னானம் செய்யும் தொண்டனாகிய யோகி சம்சார சாகரத்தின் கொந்தளிப்படங்கக் காத்திருக்க மாட்டான்.

**பரஞ்:** பின் பெரும் பெரும் மகாநாட்டுத் தீர்மானங்களெல்லாம் எதற்கு? ஜனங்களைச் சீர்திருத்த இல்லை என்றால்?

**ஆரு:** மகாநாடுகளும் தீர்மானங்களும் தொண்டனுக்கல்ல. அவனுக்குத் தலைவன் காட்டும் வழி அல்லது மனசாக்ஷி தூண்டும் மார்க்கம். இத்தொண்டனின் அமைதியான தொண்டை விளம்பரமின்றிச் செய்விக்கப் பாமர ஜனங்களின் மனதை வசீகரித்துப் பராக்குக்காட்டச் செய்யும் ஓர் லாபகரமான பெருஞ் சூழ்ச்சியே மகாநாடுகள் முதலியன.

**பரஞ்:** அப்படியானால் நமது மகாநாட்டைக் கூட்டும் தேசியத் தலைவர்களெல்லாம் தொண்டர்களில்லையா?

**ஆரு:** இல்லை என்று யார் சொன்னார்கள்? தொண்டனின் தொண்டு பழுதுறா வண்ணம் ஜனங்களைக் கவர்ந்து சமூக அலையைச்சிறிது தேக்கச்செய்யப்படும் திருப்பணியின் சூத்திரதாரர்கள் இத் தலைவர்கள். அதே சமயத்தில் உண்மைத் தொண்டன் குற்றங்களைக் கண்டுபிடித்துக் களைந்தெறியும் தொண்டில் ஈடுபட்டிருப்பான். ஆகவே உண்மைத் தொண்டு தீர யோசித்து குற்றம் யாது குற்றவாளி யாரென்று கண்டுபிடிப்பது முதலில்.

**பரஞ்:** ஆம். நீர் சொல்லுவது சரியே. நாம் கேடடைந்த விதம் எதனால் என்று பார்க்க வேண்டியதே. பலகாலமாக இவ்விதமே உழன்று விட்டபடியால் ஒன்றும் புரியவில்லை.

**ஆரு:** அவ்வளவு சிரமமில்லை. பெருங் குற்றம் **சோம்பல்.** குற்றவாளி **அரசாங்கம்.** பழுதற்றதில்லை இன்றைய நிலை.

பரஞ்: புதிர் போடாதேயும். பழைய காலத்தைவிட எவ்வளவோ சுறுசுறுப்பாகத்தான் இருக்கிறார்கள். எவ்வளவு கஷ்டப்பட்டு இயந்திரங்கள் முதலியவைகளைக் கண்டுபிடித்து இராப்பகலாக ஜனங்கள் வேலை செய்கிறார்கள்! சில சோம்பேறிகள் எல்லாக் காலத்திலும் இருக்கிறார்கள். அரசாங்கமும் பலவிதமாக ஆலோசனைகள் செய்து அடிக்கடி நமது க்ஷேம லாபங்களுக்குகந்தாற்போல் சட்டங்களையியற்றுகிறது. அப்படிக்கிருக்க அபாண்டமான பழியைச் சுமத்துகிறீர்களே!

ஆறு: புதிர் போடவில்லை. வீண் பழி சுமத்தவுமில்லை. மனமொப்பிச் சுறுசுறுப்புடன் வேலை செய்தால் சத்தியம் பலமடையும். தற்காலம் பார்க்கும் சுறுசுறுப்பெல்லாம் அத்தன்மையதில்லை. சுழலில் சிக்கியவன் வேகமாகச் சுற்றிச் சுற்றி நீந்துகிறானென்பதுபோல இப்பொழுது வேலை செய்கிற ஜனங்கள் நிலை. இஷ்டப்பட்டாலும் இல்லாவிட்டாலும் இக் காலச்சக்கரம் நிம்மதியைக் கொடுக்காது. வேலை செய்தேயாக வேண்டி இருக்கிறது. அரசாங்கமும் அவ்விதமே செய்கிறது. நாளுக்கு நாள் பலபல ப்ரச்னைகள் புதிது புதிதாக முளைக்கின்றன. ஆரம்பத்தில் இருபாலார்களும் சறுக்க ஆரம்பித்து விட்டார்கள். மறுபடியும் தங்கள் நிலையை அந்தரத்திலாவது நிறுத்திகொள்ள இவ்வளவு பாடும் வேண்டி இருக்கிறது.

பரஞ்: அப்படியானால் தெளிவாக விவரியும் உமது ஆராய்ச்சியை.

ஆறு: அரசாங்கம் ஜனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவே ஏற்பட்டதென்று முன்பே கூறினேனல்லவா? இவ்வரசாங்கமும் நம்போன்ற மனிதர்களாலேயே நிர்வகிக்கப்படுகிறது. ஆகவே உடனுக்குடனே எல்லோர் தேவைகளுக்கும் வழி செய்வதில் சிறிது தவக்கம் ஏற்படத்தான் ஏற்படும். அவ்வாறு ஏற்படுகையில் சில பேர்களுடைய தேவைகள் சிலகாலம் கவனிக்கப்படாமல் தேக்கம் ஏற்படுகிறது. இப்படி ஏமாற்றம் ஏற்பட்ட சிலர் தாங்களே நேரிடத் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முயலுகிறார்கள். அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடமிருந்து தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை நேரிடவோ மறைமுகமாகவோ பற்றிக் கொள்ளுகிறார்கள். இதற்குத் தாங்களுழைத்துச் செய்ய வேண்டிய ப்ரத்யுபகாரத்தைச் செய்ய இவர்கள் தயார்தான். ஆனால் இதை வாங்கி பரிமாறவேண்டிய அரசாங்கம் இவர்களைக் கவனியாததினால் இப் ப்ரத்யுபகாரம் செய்யப்படாமலே தங்கிவிடுகிறது. இச்சனங்கள் மேலும் மேலும் தங்கள் தேவையைப்பூர்த்தி செய்துகொள்ளுவது மட்டும் தடைப்படுவதில்லை. ருசிகண்ட பூனைகளைப்போல் இவ்விதமே வேலை செய்யாமல் ஊதியம் பெறுவதைச் சுகமாகக் கருதினார்கள். இச்சிலர் நிலையைக் கண்ட மற்றும் சிலர் பொறுமையுற்றார்கள். தாங்களும் ஏன் அவ்வாறு வேலை செய்யாமல் ஊதியம் பெறக்கூடாதென்று சபலபட்டார்கள். உடனேஉடன் பிறந்தேகொல்லும் வியாதியாகிய சோம்பல் இவர்களைப் பற்றிக் கொண்டது. இவ்வியாதி தொற்றுநோய் போல் பரவியது. பெரும்பாலும் எல்லா ஜனங்களையும் பற்றிக் கொண்டதெனலாம். இதன் விளைவுதான் களவு, பொய் சொல்லுதல், ஏமாற்றுதல் முதலியவைகள். தங்கள் சோம்பேறித்தனத்தை மறைக்கப் பலபல சாக்குகள் கூறத் தலைப்பட்டார்கள். முதலாளித்துவம் தலை தூக்கியது. மனிதன் மனிதன்மேல் அதிகாரம் செய்ய ஆசைகொண்டான். அரசாங்கம் இந்நிலையைக் கண்டு திடுக்குற்றது தாங்கள் சறுக்கியதை யறிந்தார்கள். கூடுமான வரையில் நிலைமையைச்சீர்திருத்தவிழைந்தார்கள். சோம்பலினுத்பாதங்களைத் தடுக்க நியாயசபை போலீஸ் முதலியவைகள் உண்டாகின. சில பொது நலன்களுக்கான காரியங்களென்று பிரித்துப் பிரித்து இலாகாக்களுண்டாயின. தான்றோன்றியாக ஆட்சி செலுத்த வேண்டுமென்று மனிதனுள்ளத்தில் தோன்றிய மிருக

[தொடர்ச்சி 32-ம் பக்கம் பார்க்க.]

# கண்டோம் சீதையை

வே. நாராயணன் எம். ஏ., எம். எல்., மயிலாப்பூர்

இரண்டு காட்சிகள் கொண்ட ஓரங்க நாடகம்.

**—: நாடகப்பாத்திரங்கள் :—**

ஸ்ரீராமன், லக்ஷ்மணன், — மனிதர்கள்.
சுக்கிரீவன், ஹநுமான், ததிமுகன், நளன், நீலன் — குரங்குகள்.
ஜாம்பவான் — கரடி. வேறு மூன்று குரங்குகள்.
இடம்: மதுவனத்திலும், கிஷ்கிந்தையிலும், சுக்கிரீவனது அரண்மனையிலும்.

## காட்சி 1

இடம்: மதுவனம்.
காலம்: மாலைப்பொழுது.
ததிமுகன் பிரவேசம்

---

**ததிமுகன்** (தனக்குள்ளே): இந்தத் தோட்டத்திற்குக்காவற்காரன் வேண்டியதே இல்லை. சுக்கிரீவ மகாராஜாவும் இந்த மதுவனத்திலே வந்து உல்லாசமாக இருப்பதில்லையே. எப்பொழுதும் அந்த ஸ்ரீராமனுடையதேவியை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற கவலையிலேயே ஆழ்ந்திருக்கிறார். வடக்கேயும் மேற்கேயும் கிழக்கேயும் போன சேனைகளெல்லாம் தேவியைக் காணாது திரும்ப வந்துவிட்டன. தெற்கே போனவர்களுடைய கதி என்ன ஆயிற்றோ? யாவரும் கவலைப்பட்ட வண்ணமே இருக்கிறார்கள். ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. இப்படியிருக்க, இங்கே யார் வரப்போகிறார்கள்! நான் சற்றுநேரம் அரண்மனைக்குப் போய் வருகிறேன் (போகிறான். சற்று நேரம் ஆனதும், குரங்குகள் தோப்பிலே புகுந்து மரங்களை ஒடிக்கும் சத்தம் கேட்கிறது).

(நீலன் நளன் ஜாம்பவானுடன், வேறு மூன்று குரங்குகளும் பிரவேசம்).

**நீலன்:** அடே நளா! என்னடா கட்டிடத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? கள்ளுக்குடம் எல்லாம் சூறை போகிறது. அப்புறம் ஒன்றும் கிடைக்காதபோய்விடும். இந்தா, இந்தக்கள்ளு என்னமா இனிக்குது பார்.

(குரங்குகள் ஆர்ப்பாட்டம் செய்கின்றன).

அடபசங்களா! எதிலேயும் ஒழுங்கு வேண்டும். சண்டைக்குப் போகிற மாதிரி விழுந்துக்கொண்டு ஓடாதேயுங்கள்.

**நளன்:** இங்கேகூடவா நீலா உன் சேனாபதி அதிகாரம்! (ஜாம்பவானைப் பார்த்து) என்ன பெரியவரே! நீங்கள் தான் சொல்லுங்கள்.

**ஜாம்பவான்:** கிழட்டுக்கரடி நான்; எனக்கென்னதெரியும்? எதற்கும் ஒழுங்குவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயமும். ஆனால் எனக்குத் தெரியாதா உங்கள் குரங்குச்சுபாவம்? கிழவன் பேச்சை யார்கேட்கிறார்கள்?

**நீலன்:** கேளுங்களடா தாத்தாபேச்சை!

**குரங்குகள்:** யாரடா கள்ளுத்தோப்பிலே கரடியை விட்டடித்தது?

**நளன்:** நீலா! அதோ இளவரசு போகிறார்.

**நீலன்:** அடே குரங்குகளா, சும்மா 'கப்-சிப்' என்று இருங்கள் இளவரசர் போகும் வரையாவது.

**ஒரு குரங்கு:** இளவரசர்! யாருக்குப் பயம் அவரைக்கண்டால்? மகாராஜா சுக்கிரீவன் தான் வரட்டுமே! அந்த மனுநீதி மன்னன் ராமன் வந்தாலும் பயப்பட மாட்டோம்.

**வேறொரு குரங்கு:** இளவரசரைப் பார்த்தாயா? நம்மைப்போலேதான் அவரும் குடித்துவிட்டுத் தள்ளாடுகிறார்.

**மூன்றாம் குரங்கு:** (உளறிக்கொண்டே) அடே! ஆளைப்பார்த்துச் சொல்லு. நானு குடிச்சுட்டு உளறுகிறேன்?

**முதல் குரங்கு:** ஆமாண்டா! நீ குடிக்கவே இல்லை. அடே! கொண்டா இவனுக்கு இன்னொரு மொந்தை.

**நீலன்:** என்னடா! சொன்னால் கேட்க மாட்டீர்களா! (அவர்களை அதட்டுகிறான்)

**மற்றெல்லோருமாய்:** ஹநுமார்தான் சொல்லிவிட்டாரே! வேண்டிய மட்டும் குடியுங்களடா என்று. அவர்தானே தலைவர்; அவர்தானே தேவியைக்கண்டார்? இனிமேல் யாருக்கு அதிகாரம்? இதோ வருகிறானே ததிமுகன், இவனுக்குக்கூட அதிகாரமில்லை.

**ததிமுகன்:** (பிரவேசித்து) யாருக்கு அதிகாரமில்லை? இந்தத் தோப்புக்குக் காவல் யார் என்று நினைத்தீர்கள்?

**குரங்குகள்:** யாரடா தயிர்மூஞ்சி! நீ வேறு அதிகாரம்பண்ண வந்துவிட்டாய்? நாங்கள் யாரென்று நினைத்தாய்? ஒவ்வொருவரும் ஒரு ஹநுமாராக்கும்! கிட்டேவந்துபார். அப்போது தெரியும்.

(ததிமுகன் குரங்குகளை அடிக்கிறான். நளன் நீலன் ஜாம்பவான் குரங்குகள் எல்லோருமாக அவனை அடித்துத்துரத்துகிறார்கள்)

**ததிமுகன்:** (ஓடிக்கொண்டே) மகாராஜா! சரணம். ராமா! சரணம்.

**குரங்குகள்:** தொலைந்தான் அந்தத்தயிர் மூஞ்சி. வாருங்களடா கூத்தாடலாம்.

**நீலன்:** (நளனைப்பார்த்து) நளா! வா, நாமும் சேர்ந்து கூத்தாடலாம்.

**நளன்:** (குடிவெறியில்) யாரைப்பார்த்துச்சொல்லுகிறாய்? நான் இப்போது ஹநுமானாக்கும்!

**முதல் குரங்கு:** கேட்டாயா பேச்சை? இந்த நளன் ஹநுமானாய் விட்டானாம்; சரி, சரி, இந்த ஹநுமானைப்பாடுவோம் வா.

**இரண்டாவது குரங்கு:** ஆமாண்டா! தாலாட்டுப்பாடி இந்த ஹநுமாரைத் தூங்கவைக்கலாம்.

**மூன்றாம் குரங்கு:** இல்லையடா; இந்த ஹநுமாரை முத்தமிடலாம் (பாடுகிறான்)

ஆரமிட்ட சுடர்வே லிராக்கமி லாக்கனென
தன்னைப யெடுத்துவரிநீர்
அலையிட்டனன் கோல்? ஓநமலை யிட்டனன்
கோல்?வா னதமிட்டனன்கோல்?
[கோடியார்
புரமிட்டனன்கோல்?எவ்விடமிட்டனன்கோல்
என் றறிகிலேன் என்றுபோதமிப்
புலமிட்டவுணர்வு சஞ்சலமிட்ட பொழுதிலோ
போங்கர் எதிரிட்டு நிலவத் [து
தாமிட்ட புலிமுன் மான்கன்றிட்டதாமெனத்
தவலையிட் டுருகு நானத்
தன்னனை யாக்கர்தல காலனை இராமனிரு
தன்மணியை வாழ்த்தி வாழ்த்தி
விரலிட்ட வண்ணமோ திரமிட்ட தூதானி
மென்பவள முத்த மருளே
மிக்ககதி தருகின்ற எங்களுடை யநுமந்த
மென்பவள முத்தமருளே.

**மற்றோர் குரங்கு:** அடே பார்த்தாயா இன்னொரு ஹநுமான்! இவன் பாட்டைக்கேளு.

**குரங்கு:** (பாடிக்கொண்டே)

நானே பாக்கியவானே
என் பேர்தானே ஹநுமானே
மான்விழியாள் மன்னன்தேவி
மைதிலியை—நானே
கண்ணாரக் கண்டேனே.

**குருட்டுக்குரங்கு:** அடே நீயா கண்டாய்? நீ இக்கரையிலே என்ன பண்ணுகிறது என்று முழித்துக் கொண்டிருந்தாயே! நானல்லவா கண்டேன்! (விருத்தம் பாடுகிறான்)

ஏழ்கடலுக்கப்பால் இலங்கை யிருந்தாலும்
அந்த
ஆழ்கடலையெல்லாம் கள்ளாக் குடித்துவிட்டு
வாழ்க மகாராசன் வாழ்க அவன் தோழன்
வாழ்க அவன்தேவி வாழ்கநான் என்பேனே.

**முதற் குரங்கு:** அடே கவிச்சக்கரவர்த்தி, போதும் உன்பாட்டு; நீ கடலைக் கள்ளாக் குடித்தாலும் குடிப்பாய்; தேவியை எப்படிப் பார்ப்பாய்? குருட்டுப்பயலே!

**குருட்டுக் குரங்கு:**

அசோக மரத்தடியில்
சோகவுரு வெடுத்து
தோன்றினள் தேவி;கவிக்
கண்ணுற் கண்டேனே.

உனக்கென்ன தெரியும் எழுத்து வாசனை? சுத்த அண்ணாத்தை நீ. போதாக்குறைக்கு நொண்டி.

**முதற் குரங்கு:**

அண்ணாந்தை என்றென்னை
அவமதித்தாயானாலும்
நொண்டி யென்றென்னை
நையாண்டி செய்தாலும்
ஹநுமான் நீ என்றென்னை
தொழுது விட்டாயானால்
அக்கணமே அவனைப்போல்
அக்கரைக்கு பாய்வேனே.

**நளன்:** போதும் குரங்குகளா! நிஜ ஹநுமாரை எங்கே காணோம்; இளவரசையும் காணவில்லையே!

**குரங்குகள்:** எங்கேனும் குடித்துவிட்டுக் கூத்தாடிக்கொண்டிருப்பார்கள் யார் கண்டார்கள்?

**நீலன்:** அவர்கள் குடிக்கமாட்டார்கள். மகாராசாவிடம் போயிருப்பார்கள்.

**குரங்கு:** அவர்கள் எங்கே போனால் நமக்கென்ன கவலை; குடம் குடமா கள் இருக்க நமக்கென்ன கவலை. (பாடுகிறான்)

நமக் கென்ன கவலை?
நம்ம கையிலே கள்ளுக்
குடமிருக்கையிலே
நமக்கென்ன கவலை?

### காட்சி 2

சுக்கிரீவன் அரண்மனையில் கொலு மண்டபம். சுக்கிரீவனும் இராமனும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்கள். லக்ஷ்மணன் இராமனருகிலே நிற்கிறான்.

காலம்; மாலைவேளை

---

**இராமன்:** என் தேவியைக்காண்பேனா!

**சுக்கிரீவன்:** காண்பீர்கள்; இன்றே தெற்கேபோன ஹநுமார் வந்துவிடுவார்; அவர் பிராட்டியைக் காணாது வரமாட்டார். (ததிமுகன் பிரவேசித்தல்)

**ததிமுகன்** (தலைவணங்கி): மகாராசா! காப்பாற்றவேண்டும். நீங்கள்தான் காப்பாற்றவேண்டும்.

**சுக்கிரீவன்:** என்ன செய்தி, சொல்! யார் உன்னை இப்படி அடித்து விட்டார்கள்.

**ததிமுகன்:** ஐயோ! தங்கள் மதுவனத்தை அழித்துவிட்டார்களே! நானும் ஒரு காவலாளியா? என்னையும் அடித்துத் துரத்திவிட்டார்களே!

**சுக்கிரீவன்:** யார் அவர்கள்?

**ததிமுகன்:** தெற்கே போனார்களே, அவர்கள்.

**சுக்கிரீவன்:** என்ன; ஹநுமார் முதலியோரா? வந்துவிட்டார்களா? மதுவனத்தை அழித்துவிட்டார்களா? நல்லது, ததிமுகா! நீ போய் அவர்களை அழைத்து வா. (ததிமுகன் போனபின் இராமனைப் பார்த்து) நண்பா! உன்தேவியைக் கண்டு பிடித்தாயிற்று. ஹநுமான்தான் கண்டு பிடித்திருக்கவேண்டும்.

**இராமன்:** சீதையைக் கண்டார்களா! அவள் உயிரோடு இருக்கிறாளா? நான்

அவளைக் காண்பேனா? (ஆர்ப்பாட்டஞ் செய்துக்கொண்டு குரங்குகள் பிரவேசிக்கின்றன. வரும்போதே பாடிக் கொண்டு வருகின்றன; ஹநுமான் பின் தங்குகிறார்.)

**குரங்குகள்:**

கண்டோம் கண்டோம் கண்டோம்
கடலுக்கப்பாலே கண்டோம்
கற்புக்கரசியைக் கண்டோம்
காகுத்தன் தேவியைக் கண்டோம்
கண்டோம் கண்டோம் கண்டோம்.

**இராமன்:** கண்டீர்களா சீதையை? எல்லோருமா? எங்கே கண்டீர்கள்?

**குரங்குகள்:** ஆமாம்;

எல்லோருமாகவே கண்டோம்
இலங்கைத் தீவிலே கண்டோம்
அசோக வனத்திலே கண்டோம்
அலைகடல் மத்தியிற் கண்டோம்.

**சுக்ரீவன்:** ஹநுமார் எங்கே?

**குரங்குகள்:** ஹநுமாரா! மகாராசாவே நாங்கள் யார் என்று நினைக்கிறீர்கள்!

எல்லோரும் ஹநுமார்கள்
கடலினைத்தாவி, லங்கையைமேவி,
ராமனின்ஆவியை ஜானகிதேவியை
கண்ணாலே கண்டோம் நாங்கள்,
எல்லோரும் ஹநுமார்கள்.

**இராமன்:** பார்த்தாயா, தம்பி! இவர்கள் ஐக்கிய உணர்ச்சியை.

**லக்ஷ்மணன்:** ஆமாம்! இன்று முதல் எல்லாக் குரங்குகளும் ஹநுமார்களே.

**சுக்ரீவன்:** இருக்கட்டும் நிஜ ஹநுமார் எங்கே?

**குரங்குகள்:** (ஹநுமார் வருவதைப் பார்த்து) இதோ நிஜ ஹநுமார்.

இவன்தான் இவன்தான் இவன்தான்
கடலைத் தாவின திவன்தான்
கற்பினைக் கண்டது மிவன்தான்
ஆழி கொடுத்தது மிவன்தான்
அரக்கரை யழித்தது மிவன்தான்
இலங்கை யெரித்தது மிவன்தான்
கள்ளைக் குடியுங்கள் என்று
துடிக்கக் கொடுத்தது மிவன்தான்
இவன்தான் இவன்தான் இவன்தான்.

**இராமன்:** ஹநுமானே; வாராய்? கண்டாயா என் சீதையை?

அவளைக் கண்டகண்களை நான்காண
[விழைவனே
அவளைக் கண்டசெய்தியை நான்கேட்க
[விழைவனே
அவள்மொழிந்த வார்த்தைதன்னை விரும்பிக்
[கேட்பேனே
அவளைக்கண்டா லொத்துமுன்னைக் காண
[வாராயே.

**ஹநுமான்:** ப்ரபோ! ராமச்சந்திரா! கண்டேன், கண்டேன் கற்பினுக் கனியை. அலைகடலின் மத்தியிலே அசோக வனத்தினிலே உம் பெருந் தேவியைக் கண்டேன், என்பெருந்தெய்வத்தைக் கண்டேன், அரக்கரை யழிக்கும் அணங்கினைக் கண்டேன்.

உன்தல முன்னதாக்கினள்—மங்கை
தன்தலந் தன்னதாக்கினள்—அரக்கர்
வன்தலம் கூற்றுக் கீந்தனள்—தேவி
என்தல மேனத்துத் தந்தனள்.

ஹே! விற்பெருந்தடந்தோள் வீர! வீங்கு
[நீரிலங்கை வெற்பில்
நற்பெருந்தவத் தளாய நங்கையைக்
[கண்டேனல்லேன்
இற்பிறப் பென்பதொன்று மிரும்பொறை
[யென்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களி நடம்
[புரியக்கண்டேன்.

அங்கும் அவளிடத்திலும் உம்மையே கண்டேன்.

கண்ணிலுமுளை நீ; தையல் கருத்திலுமுளை நீ;
[வாயின்
எண்ணிலுமுளை நீ; கொங்கை யிணைத்துணை
[தன்னில் ஓவா
தண்ணால் வெங்காமனெய்த அலரம்பு
[தொளைத்த ஆறா
புண்ணிலுமுளை நீ; உன்னைப் பிரிந்தமை
[பொருந்திற்றமோ.

**இராமன்:** அவள் என்ன சொன்னாள் நீ என்ன செய்தாய்?

**ஹநுமான்:** உம் மோதிரத்தைக் காட்டினேன்; அதை வாங்கி யெடுத்து, மார்போடு அணைத்துக் கொண்டாள்; இங்குள்ள தன்மை யெல்லாம் கேட்டாள்; அங்குள்ள தன்மையெல்லாம் தெரிவிக்கச் சொன்னாள். "இன்னும் ஒருமாதம் உயிர் காத்திருப்பேன். அதற்குள் வந்து என்னைக் காக்கவேண்டும்" என்றாள்; அடையாளமாக இந்தச் சூடாமணியைக் கொடுத்தனுப்பினாள்; இதோ, சூடாமணி!

**இராமன்:** (சூடாமணியைப் பெற்றுக் கொண்டு) ஆ! சூடாமணியே! நீயும் என் தேவியைவிட்டுப் பிரிந்தாயே! அந்தோ! சுக்ரீவா! என்னால் இனி ஒருக்கணமும் உயிர்தாங்க முடியாது; இன்றே புறப்படுவோம், இலங்கையை நோக்கி. ஹநுமானே! தேவியின் உயிரைக்காத்தாய் நீ; என் உயிரையும் காத்தாய்! உனக்கு நான் என்ன செய்யப்போகிறேன்! என் உயிரும் உடலும் உன்னுடையதே! வா, என்னைக் கட்டி அணைத்துக்கொள்.

**ஹநுமான்:** ப்ரபோ!

---

# அகில பாரதீய கலாசங்கம்

**திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி**

---

நம்முடைய புராதனமான பாரததேசத்தில் கலைகளின் ஒளி மங்காமல் அநேக நூற்றாண்டுகளாகப்பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம், காவ்யம், நாடகம் முதலிய அழகுக்கலைகள் உலகம்போற்றும்தேர்ச்சியை அடைந்திருக்கின்றன. ஆனால் நம்முடையதேசம் மிகவும் விஸ்தாரமானதாலும், அநேக மொழிகளும் முறைகளும் வழங்கிவந்திருப்பதாலும், அவைகளுடைய வேற்றுமைகள் சிறிது சிறிதாக அதிகப்பட்டுவந்திருப்பதாலும் அவைகளுடைய ஒற்றுமையின்உணர்ச்சி குன்றிக்கொண்டே வருகின்றது. வடமொழியில்உள்ள அடிப்படையான நூல்களின் பழக்கமும் குறைந்து கொண்டே வருகின்றது. நாட்டின் ஒற்றுமை யுணர்ச்சியும் இன்றியமையாதது. ஒவ்வொரு மொழி வழங்கும் நாட்டில் அந்தமொழியையும் அந்த நாட்டிலுள்ள கலை சம்பிரதாயங்களையும் வளர்ப்பது முறையே. ஆனால் எல்லா நாடுகளுக்கும் பொதுவாக உள்ள கலை தத்துவங்களுடைய உணர்ச்சி மங்கிப்போகும்படி விடக்கூடாது. அதற்கு ஒரு பொதுவான சங்கம் இருந்து பல நாடுகளில் உள்ள சங்கங்களைக் கிளைச் சங்கங்களாகக் கொண்டு அது பொது கலைத் தத்துவங்களைப் பரப்பும் தொண்டைப்பரிவுடன் செய்யவேணும். அத்தகைய சங்கத்தை நிறுவுவதற்காக டி. விச்வேச்வர ராவ் பெரும் முயர்ச்சி செய்து ஊக்கத்துடன் உழைத்து வருகிறார். பல நாடுகளில் உள்ள அழகுக் கலைகளின் மேன்மைகளை அத்தகைய சங்கம் தான் பரப்பமுடியும். அவைகளை நன்கறிந்து அடிப்படையான பொது கலைதத்துவங்களை நாம் உணர்ந்தால்தான் ஒவ்வொரு மொழி வழங்கும் ஒவ்வொரு நாட்டிலும் கலைகள் ஓங்கிவளரும். அப்பொழுதுதான் பாரத மணியின் கம்பீரமான த்வனி உலகம் எங்கும் ஒலிக்கும் என்று என் திண்ணமான எண்ணம்.

# பரிதி நிறமாலை

அல்லது

# சோலார் ஸ்பெக்டரம்

டி. பி. நவநீதகிருஷ்ணன், எம்.ஏ., அண்ணாமலைநகர்.

மின்வளை விளக்கு (அல்லது எலக்ட்ரிக் ஆர்க்லாம்ப்) மின்னொளிர் விளக்கு, (அல்லது சுடர்க்கவி எலக்ட்ரிக் க்ளோ) (அல்லது மாண்டில்) விளக்கு இன்னோரன்ன விளக்குகள் வெண்சுடர் (அல்லது இன்காண்டிஸண்ட்) ஒளியுடன் பிரகாசிக்கின்றன. இவற்றின் ஒளியை நிறமாலையளவி (அல்லது ஸ்பெக்ட்ராமீடர்) கொண்டு பரிசீலனை செய்தால், தொடர் வண்ணநிறமாலை (கண்டினுயஸ் ஸ்பெக்டரம்)யைப் பெறுகிறோம். மின்சாரவிட்டம் (எலக்ட்ரிக் டிஸ்சார்ஜ்)உள்ள வெட்டைக் குழாயில் (வேகும் ட்யூபில்) பல வகையான ஆவிகளை வைத்து, அவை தரும் ஒளியை, நிறமாலை யளவி (ஸ்பெக்ட்ரா மீடர்) கொண்டு பரிசீலனை செய்தால், பல்வேறான வரிநிறமாலை (லைன் ஸ்பெக்டரம்) களைப் பெறுகிறோம். இப்பொழுது வெண்சுடர் ஒளி (இன்காண்டிஸண்ட் லைட்) யின் வெப்பநிலை (டெம்பரேசர்) யைவிடக் குறைந்த வெப்பநிலை (டெம்பரேசர்) யிலுள்ளதான, அடிப்பொருளின் (எலிமெண்டின்) ஆவியை ஓரிடத்திருக்குமாறு செய்து, அதனூடே வெண்சுடர் (இன்காண்டிஸண்ட்) ஒளியைப் பாயுமாறுசெய்து, பின்வெளிப்பட்ட ஒளியை நிறமாலையளவி (ஸ்பெக்ட்ரா-மீடர்) கொண்டு பரிசோதித்தால், வேறோர் வகையான நிறமாலையை (ஸ்பெக்டரத்தை)ப் பெறுகிறோம். இந்நிறமாலையிலும் (ஸ்பெக்டரத்திலும்) தொடர் வண்ண நிறமாலை (கண்டினுயஸ் ஸ்பெக்டரம்) யில் போலவே, நிறங்கள் சிவப்பினின்று ஊதாவரை ஒழுங்காய் அமைந்துள்ளன. ஆனால் அதன் குறுக்கே சில கறுப்புக் கோடுகளும் இருக்கின்றன. இக் கோடுகள், ஆவியாயுள்ள பொருளின் வரிநிறமாலை (லைன் ஸ்பெக்ட்ரம்) யிலுள்ள கோடுகள் இருக்கும் இடங்களிலேயே உள்ளன. இதனால், வெண்சுடர் (இன்காண்டிஸண்ட்) ஒளிவரும் பாதையிலிருந்த ஆவி, அவ்வெண்சுடர் ஒளியிலின்று சில நிறங்களைக் கிரகித்துக் (அப்ஸார்ப்செய்து) கொண்டதென்று ஏற்படுகின்றது. அந்நிறங்கள், அவ்வாவி கிளர்ச்சியான (எக்ஸைடட்) நிலைமையில் உள்ளபோது தரும் வரிநிறமாலை (லைன்ஸ்பெக்ட்ரம்) யிலுள்ள கோடுகளுக்கேற்றவாறே இருக்கின்றன.

ஒருஆவி, கிளர்ச்சியான (எக்ஸைடட்) நிலைமையிலுள்ளது என்பது அது, வெட்டைக்குழாயிலோ (வேகும் ட்யூபிலோ), எரியும் தணலிலோ உள்ளபோது, மின்சார சக்தியாலோ, சூட்டின் மிகுதியாலோ அதன் மூலத்தாள்கள் தீவிரப்பட்டுள்ள நிலைமை.

உதாரணமாக, வெண்சுடர் ஒளிவரும் பாதையில், உப்பிய (சோடியம்) ஆவி இருக்குமாயின், அதன் அரிகுரியான மஞ்சள்நிறப் பகுதியில், இருமெல்லிய கருங்கோடுகள் இருக்கும். வெண்சுடர் ஒளிதரும், தொடர்வண்ண நிறமாலை (கண்டினுயஸ்ஸ்பெக்ட்ரம்)யில் சிலநிறப் பகுதிகளை ஆவி உறிஞ்சிவிடுகின்றது. எனவே, மேலே நாம்பெற்ற நிறமாலைக்கு, உறிஞ்சியல் நிறமாலை (அப்ஸார்ப்ஷன் ஸ்பெக்டரம்) என்று பெயர். உறிஞ்சியல் நிறமாலையில் (அப்ஸார்ப்ஷன் ஸ்பெக்டரத்தில்) ஒழுங்காய்ப் பரவியுள்ள பலநிறங்களிடை, குறுக்கே சில கறுங்கோடுகள் காணப்படுகின்றன.

இனிமேல் நாம், இக்கட்டுரைக்குத் தலைப்பாய்க் குறித்துள்ள பரிதி நிறமாலையை (சோலார் ஸ்பெக்டரத்தை)ப் பற்றிக் கவனிப்போம். சூரிய ஒளியால் பெற்ற நிறமாலையே பரிதிநிறமாலையாம். அது, சுவர் அல்லது திரையின் மீது காணப்படும் போது, தொடர்வண்ண நிறமாலையை (கண்டினுயஸ் ஸ்பெக்டரத்தை)ப்போல் தென்படுகின்றது ஆயினும் நிறமாலையளவியினூடே நோக்கும் போது, அது, உறிஞ்சியல் நிறமாலை (அப்ஸார்ப்ஷன் ஸ்பெக்டரம்)யாயுள்ளதெனத் தெரிகின்றது அதாவது, ஒழுங்காயமைந்துள்ள பல நிறங்களிடை, குறுக்கே பலகறுங்கோடுகள் உள்ளன. இக்கோடுகளை முதன் முதலில். ப்ரான்கோபர் என்ற விஞ்ஞானி கண்டார். ஆதலின், அவை ப்ரான்கோபர் கோடுகள் (லைன்ஸ்) என்ற பெயரைப் பெற்றன. ப்ரான்கோபர், இவ்வாறுன கோடுகள் மூந்நூற்றைம்பதைக் கண்டுபிடித்து, அவைகள்செய்து, அவற்றின் நிலைப்பாடு (பொஸிஷன்)களை, நிறமாலைப் படங்க்ளில் (ஸபெக்டரம் மாப்களில்) திட்டமாய்க் காண்பித்தார்.

பரிதி நிறமாலையிலுள்ள கோடுகள் எவ்வாறு அதில் வந்தன என்பதற்கு இனிக்காரணம் கூறலாம். சூரியன் பல்வேறு படலங்களாலானது எனக்கருதப்படுகின்றது. ஒவ்வொரு படலமும் அதற்கெனப் பிரத்தியேகமான தன்மையுடனுள்ளது: உட்பகுதியிலுள்ள படலங்கள் மிகுந்த சூடாயுள்ளன. அவற்றின் வெப்பநிலை (டெம்பரேசர்), சுமாராக 40,000,000°C இருக்கலாமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. உட்படலங்கள் பல சேர்ந்த பகுதிக்கு ‘வெந்தணற் பிழம்பு’ (போடாஸ்பியர்) என்று பெயர். இதில் எல்லாப் பொருள்களும் சூட்டின் மிகுதியால் வெண்ணிற ஜோதியுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கும். வெளியே செல்லச் செல்ல சூடு குறைகின்றது. ஆதலால், வெந்தணற் பிழம்பைச்சுற்றி, வெப்பநிலை (டெப்பரேசர்) குறைவான படலங்கள் உள்ளன. இவற்றின் சராசரிவெப்பநிலை (டெம்பரேசர்) சுமாராக 6000 °C வெளிப்படலங்கள் சேர்ந்த பகுதிக்கு ‘நிறப்பிழம்பு’ (க்ரோமாஸ்பியர்) என்று பெயர். நிறப்பிழம்பில் (க்ரோமாஸ் பியரில்) பல வகையான பொருள்களும் ஆவிரூபமாய் உள்ளன. உட்பகுதியிலுள்ள வெண்ணிற ஒளியினின்று தொடர்வண்ண நிறமாலை (கண்டினுயஸ் ஸ்பெக்டரம்) எழுகின்றது. வெளிப் பகுதியிலுள்ள பொருள்களின் ஆவிகள், உட்பகுதியைவிடக் குளிர்ந்த வெப்பநிலை (டெம்பரேசர்)யில் இருக்கின்றன. ஆகவே அவை, தத்தமக்கான நிறங்களை அருந்தி விடுகின்றன. (அப்ஸார்ப் செய்கின்றன). ஆதலால், நாம் இவ்வுலகில், நிறமாலையளவியால் பார்க்கும்போது, மேல் குறிப்பிட்ட நிறங்களற்ற நிறமாலையைப் பெறுகிறோம். அதனால் அதனில் அநேக கறுங் கோடுகள் காணப்படுகின்றன.

வெவ்வேறு அடிப்பொருள் (எலிமெண்ட்) களுக்கான நிறமாலைப் படங்களுடன், பரிதி நிறமாலையிலுள்ள கறுங்கோடுகளையும், விஞ்ஞானிகள்ஒப்பிட்டுப் பார்த்தனர். அக்கறுங்கோடுகள், அடிப்பொருள் (எலிமெண்ட்)களின் வரிநிறமாலை (லைன்ஸ்பெக்டரம்) யிலுள்ள நிறங்களுக் கேற்றவாறேயிருந்தன. ஆகையால், பரிதி நிறமாலையிலுள்ள கறுங்கோடுகள், சூரியனின் நிறப் பிழம்பிலுள்ள (க்ரோமாஸ்பியரிலுள்ள) ஆவிகளின் உறிஞ்சுதலால் (அப்ஸார்ப்ஷனால்) உண்டானவை என விஞ்ஞானிகள் காட்டினார்கள். அதனால், இவ்வுலகிலுள்ள அடிப்பொருள்கள் (எலிமெண்ட்)கள் பலவும் சூரியனிலும் உள்ளனவென கண்டுபிடிக்கப்பட்டது.

பரிதி நிறமாலையைப் பற்றின் ஆராய்ச்சிகள் முதன் முதலாய்ச் செய்யப்பட்ட போது, அதில், இவ்வுலகிலுள்ள அடிப்பொருள் (எலிமெண்ட்) எதற்கும் பொருந்தாத, கறுங்கோடுகள் சில காணப்பட்டன. எனவே, அவ்வாராய்ச்சிகளைச் செய்த விஞ்ஞானிகள், இவ்வுலகிலில்லாத அடிப்பொருள் (எலிமெண்ட்) கள் ஒன்றோ, பலவோ சூரியனில்

இதன் தொடர்ச்சி 211-ம் பக்கம் பார்க்க.

# பால்காரி செல்லம்

எஸ். குஞ்சிதபாதம், ஆனைதாண்டவபுரம்.

அந்திநேரம். குடிசைகளில் விளக்குகள் மின்மினிப் பூச்சிகள் போல விளங்கின. ஒரு கூரையின் மீது ஒரு சேவல் உட்கார்ந்துகொண்டுஇருந்தது. ஒருநாய் அதைப் பார்த்துக் குரைத்தது. "கொக்கரக்கோ! என்னைப் பிடிக்க முடியாதே" என்று சேவல் அதைப்பார்த்துக் கூவியது. ஒரு எருமைக்கடா புழுதியை வாரி இறைத்துக்கொண்டு விழுந்தடித்து ஓடியது. குடிசைகள் அங்கும் இங்கும் சிதறிக்கிடந்தன.

இத்தமகாக்ஷேத்திரத்தைநோக்கி வந்துகொண்டிருக்கிறாள் நமது கதாநாயகி செல்லம்மாள். அவள் ஒரு பால்காரி. இந்த ஊருக்கு மூன்று மைல்களுக்கப்பால் ஒரு நகரம். அங்கே பாலும், வெண்ணெயும் விற்கச் செல்வது அவள் வழக்கம். சாயங்காலம் தினம் வீட்டுக்குச் சாமான் வாங்கிக்கொண்டு வருவாள். இன்று அவள் புருஷனுக்கு ஒரு வேஷ்டி வாங்கி வருகிறாள். அவனுக்கு வேலையை விட்டுவிட்டு நகரத்திற்குப் போக நேரம் ஏது? இன்றைக்கு நல்ல லாபம். பாட்டுக்கூடப் பாடிக்கொண்டு வருகிறாள். யாரேனும் சாலையில் குறுக்கிடுவதைக் கண்டால் நிறுத்திவிடுகிறாள் வெட்கத்தினால். அவளும் யுவதி, அவள் புருஷனும் யுவன்; அவர்கள் வாழ்க்கை ஆனந்தமாகவே இருக்கிறது

தொலைவில் ஒரு உருவம் வருவதைப் பார்த்தாள் அவள். இடைவெளி குறுகியது. அந்த ஊரிலிருந்த ராமன் தான் அந்த உருவம். அவன் நின்றான்; அவளும் நிற்கத் தயங்கினாள். அவளது அழகைக் குடிப்பவன் போல அவன் அவளைப் பார்த்தான். மங்கலான ஒளியில் அவளது எழில் மிகுந்தது. "என் நேரம் இன்று" என்று கேட்டான் அவன். எரியின் அலையைப் போல கண்ணிமையையசைத்தாள்.

"ஏன்! சாமான் வாங்கவேண்டியிருந்தது. நகரு. போகவேணும்".

இரண்டடி நகர்ந்தாள் அவள். அவன் மறுபடியும் அவள் வழியில் நின்றான்.

"அப்பாலே போ. உம்" அவன் பேசாமல் சற்று நின்றான். "யாரேனும் பார்த்தால்...."

அவன் திரும்பிப் பார்த்தான் ஒரு பிராணியையும் காணோம். "செல்லம்!" என்று மறுபடி கூப்பிட்டான் அவன்.

அவள் அவனை முறைத்துப்பார்த்தாள். அவன் அசையவில்லை. அவளும் அசைய முடியவில்லை. இருவரும் பேசாமல் நின்றனர். நிசப்தத்தை உடைத்தாள் அவள்.

"ராமா! இன்னேயோடேயா ஆயுசு முடிஞ்சுது? ஆயுசு பூராவும் மரியாதை, மானம் பார்க்க வேண்டாமா? பெயர் கெட்டுப்போனால் நல்ல பெயர் கிடைக்காது பிறகு".

அவள் வேகமாக நடந்தாள். அவன் ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டு நின்றான். அவன் மனம் துடித்தது.

பொன்னன் ரொம்ப நல்லவன். செல்லத்தின் கணவன் பொன்னன். ஒருவருக்கும் தீங்கு செய்யமாட்டான் அவன். குழந்தைமுதல் கிழவன்வரை அவனுக்குச்சினேகம். ஊரில் யாருக்கேனும் வேலிகட்ட வேண்டுமானால் பொன்னன்; கூரை வேய வேண்டுமானால் பொன்னன்; சேறு குழைக்க வேண்டுமானால் பொன்னன் எதற்கெடுத்தாலும்

பொன்னன் எல்லாருக்கும் உதவி செய்வான். எழுதப்படிக்கத் தெரியாது அவனுக்கு. ஒரு சின்னப்பெண் கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்துக்கொடு என்றதும் ஓடிவருவான். அடுத்த வீட்டில் ஒரு கிழவன் எல்லோரையும் வைது திட்டிக் கொண்டிருப்பான். அவனும் பொன்னனை நல்லவன் என்றுதான் சொல்லுவான்; குறைகூற மாட்டான். செல்லம் அவனை ரொம்பப் பிரியமாய் நடத்தினாள். போனமாதம் அவன் ஒரு ஜோடி காப்புகள் வாங்கிக் கொடுத்திருந்தான். புடவைகள் வாங்க வேண்டுமானால் அவள் இஷ்டப்படி பணம் கொடுப்பான். அந்தச்சிறிய குடிசையில், அவர்கள் இரண்டுபேரும் ஒரு மரப்பொந்தில் வசிக்கும் இரு கிளிகள் போல் அன்யோன்யமாக இருந்தனர்.

பொன்னன் வயலில் காற்றுப்பறிக்கிறான். சூரியன் மெல்ல மறைகிறது. அப்பால் குளத்தில் முழுகிவிட்டு வீடு திரும்புகிறான். இன்னும் இரண்டு நாளில் அவன் வேலை முடிந்துவிடும். பிறகு நடவு நடும் வேலை. அதில் அவனுக்குச் சிரமமேயில்லை. ஸ்திரீகள் நடுவார்கள். நட்டுக்கொண்டே பாடுவார்கள். தூங்குமூஞ்சி மரத்தடியில் வெற்றிலைப் பையை அவிழ்த்து வைத்துக்கொண்டு அவன் உட்கார்ந்து அவர்களை வேலை வாங்கலாம். பிறகு ஆண்டவன் புண்ணியத்திலே நன்றாய் விளைந்தால் தைமாசம் அறுப்பு அறுக்க வேண்டியதுதான். பொன் மயமான தானியக்குவியல்களைக் கனவு கண்டான். ஒரு உழவனுக்கு வேறு என்ன கனவு! சட்டசபைத் தேர்தல் வெற்றியா, இன்னும் ஐம்பது ரூபாய் சம்பள உயர்வா? ஆனால் அவனுக்கு ஒருஆசை இருந்தது. இன்னும் இரண்டு எருமை மாடுகள் வாங்கவேண்டும் என்று.

அவன் வீட்டிற்குள் நுழைந்தான். மண் வெட்டியை மூலையில் எறிந்தான். களைத்திருந்தான். செல்லத்தைக் கூப்பிட்டான். இரண்டு குவளைகள் மோர் வேண்டும் அவனுக்கு. அவன் காத்திருந்தான். அவளைக் காணோம். சமையல் உள்ளே எட்டிப்பார்த்தான். அவளைக் காணோம். அவன் தானே மோர் குடித்தான். அவள் எங்கே போயிருப்பாள்? யோசித்தான். கொல்லைப்புறம் சென்றான். ராமன் வேலியைத்தாண்டி மறுபுறம் குதித்தான். செல்லம் அவனைப் பார்த்து நின்றுகொண்டிருந்தாள். வெறி பிடித்ததுபோல பொன்னன் ஓடினான். ராமனைப் பிடித்தான். செல்லம் கண்களை இருகைகளாலும் மூடிக் கொண்டாள். "ஐயோ" என்று அலறினாள். பொன்னன் ராமனை ஒரு உலுக்கு உலுக்கினான்.

"போக்கிரி! என்னடா?"

பொன்னனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. "சாது மிரண்டால் காடு கொள்ளாது." செல்லம் ஓடிவந்தாள். பொன்னன் காலில் விழுந்தாள். "விட்டுடுங்க! விட்டுடுங்க! அவன் பேரிலே பிசகு இல்லே. என்னைக் கொல்லுங்க!' என்று அவள் கத்தினாள். அவள் தலைமயிர் புழுதியில் புரண்டது.

"ஆமாம்! நீதான் குற்றம் செய்தாய். ராமா போ!" என்றான் பொன்னன். பொன்னன் குடிசையினுள்ளே சென்றான். அவள் மூர்ச்சை யடைந்தாள். பிறகு எழுந்தாள். எங்கும் இருட்டுப் போர்த்தியிருந்தது. அவள் தடவிக் கொண்டே உள்ளே போனாள். ஒரு மூலையில் விழுந்தாள். பிறகு தட்டித் தடவி எழுந்து, நெருப்புப் பெட்டியைத் தேடி யெடுத்து 'சிம்னி' விளக்கைக் கொளுத்தினாள். சமைத்தாள். புருஷனை எப்படிக் கூப்பிடுவது? அவன் சாப்பிடாமல் படுத்துக்கொண்டான். அவளும் சாப்பிடவில்லை. இருவரும் பேசவில்லை. இருவரும் தூங்கவுமில்லை.

எவ்வளவு பிரியம் இருந்தது முன்பு பொன்னனுக்கு அவளிடம்! இப்பொழுதும் அவன் அவளை ஒன்றும் சொல்லவில்லை. வையவுமில்லை. இரண்டடிகூட அடிக்கவுமில்லை.

செல்லம் அன்று முதல் நகரத்திற்குச் செல்லவில்லை. அவனோடு பேச நினைப்பாள் அவள். ஆனால் தைரியம் வருவதில்லை. அவனும் பேசுவதே கிடையாது. போட்டதைச் சாப்பிடுவான். அவன் காலில் விழுந்து தன்னை அடிக்கச் சொல்ல வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. தன்னை ஏன் அவன் வையவில்லை என்று அவளுக்குத் தெரியவில்லை. வசவுகளையும், அடிகளையும், வேறு எந்த தண்டனையையும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் அவன் மௌனமாக இருப்பதைப் போல அவளுக்குக் கொடியது வேறு ஒன்றுமேயில்லை. புஷ்டியாக இருந்த அவள் அங்கங்கள் சோபையிழந்தன. அவள் ஒரு நடைப்பிணமானாள். அவள் சித்தம் நல்ல நிலையிலில்லை. அவனுக்கும் அவளைப் பார்க்கச் சகிக்கவில்லை. அவன் மனமும் குமுறியது.

வானத்தில் கருமேகங்கள் பரவின. இடி யிடித்தது; மின்னல் மின்னியது. காற்றின் சப்தம் பயங்கரமாக இருந்தது. வாழைமரங்களும், மற்ற மரங்களும் முறிந்து விழுந்தன. கொல்லையிலிருந்த பெரிய புளியமரம் நெறு, நெறு என்று முறிந்து கூரையின்மேல் விழுந்தது. எல்லோரும் எங்கேயோ போகும் இடம் தெரியாமல் போய்க்கொண்டிருந்தனர். பெரியமரங்கள் பசுமையான தீவுகளைப்போல விழுந்து கிடந்தன. சிறு மரங்களும், செடிகளும் மிதந்தன. பட்சிகளும் குருவிகளும் இறந்து தண்ணீர்ப் பிரவாகத்திற் கிடந்தன. பருந்துகள் உயர வட்டமிட்டன.

பொன்னனும், செல்லமும் பேசாமலேயே நடந்தனர். ஒரு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்தனர். பசியோ அவர்களுக்குச் சகிக்கமுடியாமல் இருந்தது. இருவருக்கும் அரைத்தூக்கம். அவள் திடுக்கிட்டெழுந்தாள். பெருமூச்சுவிடும் சப்தம் கேட்டது. பார்த்தாள். ஒரு பாம்பு பொன்னனின் கால்மீது கிடந்தது அவள் அதன் கழுத்தைப்பிடித்து இழுத்துவிட்டு ஒரு கத்தல் கத்தினாள். அவன் விழித்துக் கொண்டான். அவள் கையில் ஒரு பாம்பு இருப்பதைப் பார்த்தான். அது கடிக்க முயன்றது. வாயைப்பிளந்தது. அதன் வாயில் கூறியபற்கள் இருந்தன. ஆனால் கழுத்து நெறிந்ததால் அதனால் கடிக்கமுடியவில்லை. அவன் அதன்வாலைப் பிடித்துக் கொண்டான். 'விடு கையை' என்றான். அவள் விட்டதும் அதைசுழற்றி எறிந்தான். அது தொலையில் விழுந்தது. அவளைப்பார்த்தான் அவன். அவள் அவனது உயிரைக்காப்பாற்றினாள். தனது உயிரை லட்சியமே செய்யவில்லையவள்!

'செல்லம்' என்று கூப்பிட்டான். அவள் அருகில் பாய்ந்து வந்தான். அவளையணைந்து ஒருமுத்தம் கொடுக்க வந்தான். அவள் அப்பால் நகர்ந்து கொண்டாள், "ஐயோ! உனக்கு உண்மையாக இல்லையே நான்! போய் விட்டதே என் கற்பு!" என்றாள். அவளால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. அழுகை அவள் தொண்டையை அடைத்துக்கொண்டது.

அந்தமரத்திற்கு அவர்களிடம் கருணையில்லை. இருந்திருந்தால் அவர்கள் மீது அது விழுந்து அவர்கள் வாழ்க்கையின் துக்கத்தை ஒரேயடியாக முடித்திருக்காதா? மழை கொட்டிக்கொண்டேயிருந்தது. தண்ணீர் கொஞ்சங் கொஞ்சமாக மேலே எழ ஆரம்பித்தது. கட்டியிருந்த மாடுகள் கதறிக் கதறிக் கவலையுடன் யுத்தம் செய்து கொண்டிருந்தன.

இருவரும் மரத்துப் போயிருந்தனர். ஒரு மின்னலின் ஒளியில் அவளைப் பார்த்தான். என்ன தெரிந்தது! அவள்கையை முகத்தில் மூடிக்கொண்டிருந்தாள். ஒரு இடி இடிக்கும்போது ஒருதரம் வீரிடுவாள் அவள்; ஈரத்துணியை இழுத்துப் பிணைத்துக்கொண்டாள். மரம்விழுந்துவிடும் என்று தெரிந்து அவளைக்கூப்பிட்டான் அவன் இடியின் சப்தத்துடன் 'வெளியேபோ' என்று கத்தினான். அது சற்றுநேரத்தில் தடாம் என்று கீழே விழுந்தது. எங்கே இருட்டிலும், தண்ணீரிலும் அவர்களால் போகமுடியும்? அடிக்கடித்தோன்றி மறையும் மின்ன

யின் ஒளியில் கிராமம் முழுதும் தண்ணீர் நிறைந்து, பல குடிசைகள் விழுந்திருப்பது தோன்றியது. ஜனங்கள் கூக்குரலிட்டனர். வெகுநேரத்திற்குப் பிறகும் வெற்றி யாருடையது என்பதை நிர்ணயிக்காமல் காற்றும் மழையும் தங்கள் போட்டியை நிறுத்திக் கொண்டன. பாழான கிராமந்தான் இயற்கையின் விளையாட்டினுடைய முடிவு.

காலையிலும் எங்கும் மேகச்சாயலே இருந்தது. கதிரவன், மழையின் ஈரத்தால் அணைந்து போய் விடுவோமோ என்று பயந்து எங்கோ ஒளிந்துகொண்டான். கொஞ்சப் வெளிச்சமே யிருந்தது. எங்கும் பெரிய ஏரியாகிவிட்டது. பசுமாடுகள் வாலைத் தூக்கிக்கொண்டு நீந்தின. மனிதர்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு தத்தளித்தனர். பிறகு செல்லத்தை யாரும்காணவில்லை—பொன்னனும் ஆண்டியானான்.

107-ம் பக்கத் தொடர்ச்சி.

இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் இப்படிச் சொல்லி இருபத்தேழு ஆண்டுகள் சென்றபின், இவ்வுலகில் புதிதாய் ஒரு அடிப்பொருள் (எலிமெண்ட்) கண்டு பிடிக்கப்பட்டது. அதன் வரிநிறமாலை (லைன் ஸ்பெக்டரம்) பரிதி நிறமாலை (ஸோலார் ஸ்பெக்டரம்) யில் மீதிப்பட்ட கறுங் கோடுகளுக்கு இணையாய் இருந்தது. சூரியனில் முதன் முதலாய்க் கண்டு பிடிக்கப்பட்டு பின்னரே இவ்வுலகில் கண்டு பிடிக்கப்பட்ட அவ்வடிப்பொருளுக்கு, பரிதியம் (ஹீலியம்) என்று பெயரிட்டார்கள். (கிரேக்க பாஷையில் 'ஹீலாஸ்' என்றால் சூரியன்.) பரிதி நிறமாலை (சோலார்ஸ்பெக்டரம்) யின்பாற்பட்ட ஆராய்ச்சிகளால் பல புது விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, விஞ்ஞானம் செழிப்புற்றது.




# உணவுப்பொருள் அபிவிருத்தி

கே. வி சுப்ரமணிய அய்யர், திருவெண்காடு.

கிராமவாசிகளின் முன்னேற்றத்திற்கு உணவுப்பொருள் அபிவிருத்தி முக்கிய சாதானமாக இருந்து வருகிற போதிலும் தற்பொழுது நடக்கும் மகாயுத்தத்தின் காரணமாகவே இந்த பிரச்னை சாக்காரின் கவனத்தையும் பொதுமக்களின் ஊக்கத்தையும் கவர்ந்திருக்கிறது. இப்பொழுது விவசாயிகள் யுத்தத்தின் அணிவகுப்பில் முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கின்றனர்.

இது விஷயமாக சர்க்கார் அநேக சலுகைகள் மூலம் வியவசாயிகளுக்கு ஊக்கமளித்து வருகிறார்கள். வியவசாயிகளின் லாபஉணர்ச்சியைக்கொண்டே உணவுப்பொருளை அபிவிருத்தி செய்துவிடக்கூடும் என்பதுதான் இச்சலுகைகளின் அடிப்படையான கொள்கையென்று தோற்றுகிறது. இந்த லாப உணர்ச்சி வியவசாயிகளின் மனதில் எப்பொழுதும் இருந்தே வந்திருக்கிறது. இந்த உணர்ச்சியுடனேயே எப்பொழுதும் பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் பாட்டுக்குரிய முழுப்பலனும் அவர்களுக்குக் கிட்டுவதில்லை. உதாரணமாக என்னுடைய அநுபவத்தில் தஞ்சை ஜில்லாவில் தற்பொழுது கிடைக்கும் நீர்ப்பாசன வசதியைக் கொண்டு சாதாரணமாய் அநுசரிக்கப்பட்டுவரும் வியவசாய முறைப்படிக்கே இருபோகத்தில் சுமார் 5000 பவுண்டும் ஒருபோகத்தில் 3000 பவுண்டும் நெல் மகசூல் கிடைக்கக்கூடும். ஆனால் நடைமுறையில் இருபோகத்தில் சராசரி 2000 பவுண்டும் ஒருபோகத்தில் 1200 பவுண்டும் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகையினால் சலுகைகள் மூலம் சாகுபடி விஸ்தீர்ணத்தை விருத்தி செய்வதைவிட சாகுபடியாகும் நிலங்களில் பூராமகசூல் கிடைக்காமல் இருக்கும் காரணங்களை வியவசாய நிபுணர்களைக்கொண்டு பரிசீலனை செய்து அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியது சர்க்காரின் முக்கிய கடமையாகும். இவ்வித நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதால் சில்லறைச் சலுகைகள் மூலம் கிடைக்கும் மகசூலைவிடப் பதின்மடங்கு அதிகம் கிடைக்கக்கூடும்.

நான் 20வருஷகாலமாய் கிராமவாழ்க்கையிலும் வியவசாயத்திலும் ஈடுபட்ட அநுபவத்திலிருந்து வியவசாயிகளே நிவர்த்தித்துக் கொள்ள முடியாததும், சர்க்காரால் வெகு சுலபமாய் நிவர்த்திக்கக்கூடியதுமான பல்வேறு இடையூறுகளே அவர்களுக்குப் பூராமகசூல் கிடைக்காமல் போவதற்குக் காரணம் என்று அறிந்திருக்கிறேன். அவ்விடையூறுகளில் சிலவற்றையும் அவைகளை எப்படி நிவர்த்திசெய்யக்கூடும் என்பதைப்பற்றியும் இவ்வியாச மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நெல்சாகுபடிக்கு முக்கிய சாதனங்கள்: 1 நீர்ப்பாசனம். 2 நல்லவிதை. 3 பசுந்தாள் முதலிய உரம். 4 கிராம நிர்வாகம். இவைகளை ஒன்றின்பின் ஒன்றாய் ஆராய்வோம்.

### 1. நீர்ப்பாசனம்

a. தஞ்சை ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டில் நீர்ப்பாசன ஆதாரங்கள் பூராவும் சர்க்கார் மராமத்து இலாகாவின் பொறுப்பிலேயே இருந்து வருகிறது. ஆனால் ரிவினியு போர்டாரின் நிலையான உத்திரவுகளில் இவ்விஷயத்தில் கலெக்டருக்கு முக்கிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெகுகாலத்துக்கு முன் Dickens ஆல் வருணிக்கப்பட்ட Circumlocution

# சோப் விலைகளில் உயர்வு

மூலப் பொருள்களின் விலை மேலும் அதிகமாக உயர்ந்து விட்டதன் காரணமாக சோப்பின் விலைகளை மறுபடியும் திருத்தவேண்டி யிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இந்த அதிகப்படியான சிலவை யுண்டாக்குவதைப் பற்றி லிவர் பிரதர்ஸ் கம்பெனியார் தங்களுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறார்கள். ஆனால் மூலப் பொருள்களின் மேல் கொள்ளை லாபம் அடிப்பது நிறுத்தப்பட்டு, அவைகளின் விலைகள் நிர்ணயிக்கப்படும் வரை சோப் உற்பத்தியாளர்கள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

கீழ்க்கண்ட சோப் விலைகள் மிகவும் நியாயமானது என்று பொது ஜனங்களுக்கு உத்திரவாதமளிப்பதுடன், விலைகளை கூடியவரை குறைத்துவைகக எல்லாவித முயற்சியும் எடுக்கப்படுகிறது.

## சோப்புகளின் நியாயமான விலைகள்

## 1943-ஆம் மே-மீ 31 தேதியிலிருந்து மறு பிரசுரம் வரை

*அடியிற்கண்ட பிரபல சோப்புகளுக்கும், மற்ற பொருள்களுக்கும், ரயில் வசதியுள்ளதும், அதிக சுங்கவரி, சமஸ்தான வரிகள் வசூலிக்கப் படாததுமான இடங்களில் தற்காலத்தில் நியாயமாக கொடுக்க வேண்டிய விலைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன :—*

| | | |
|---|---|---|
| ஸன்லைட் சோப் | பெரிய சைஸ் | ரூ. 0-3-6 |
| ,, | சிறியது | ,, 0-2-3 |
| லைப்பாய் சோப் | பெரிய சைஸ் | ,, 0-4-0 |
| ,, | சிறியது | ,, 0-2-0 |
| லக்ஸ் டாய்லெட் சோப் | பெரிய சைஸ் | ,, 0-5-0 |
| ,, | சிறியது | ,, 0-1-9 |
| லைப்பாய் டாய்லெட் சோப் | பெரிய சைஸ் | ,, 0-5-0 |
| லக்ஸ் | பெரிய பாக்கெட் | ,, 1-0-0 |
| ,, | நடுத்தர சைஸ் | ,, 0-8-0 |
| ,, | சிறிய பாக்கெட் | ,, 0-4-0 |
| விம் | பெரிய டின் | ,, 0-14-0 |
| ,, | நடுத்தர சைஸ் | ,, 0-8-0 |
| காஸேஜஸ் எம்ப்ரஸ் பேல் சோப் | பார் 1-க்கு | ,, 0-9-0 |
| காஸேஜஸ் ஹவுஸ் ஒயிப் பிராண்டு சோப் | பார் 1-க்கு | ,, 1-4-0 |
| காஸேஜஸ வீல் பார் சோப் | பார் 1-க்கு | ,, 0-13-0 |

இந்த விளம்பரம் பொது ஜனங்களின் சௌக்ரியத்திற்காக
**லிவர் பிரதர்ஸ்** கம்பெனியாரால் பிரசுரிக்கப்படுகிறது

ஆபீஸ் என்பது இந்திய அரசாங்கத்தின் ரிவினியு இலாகாதான். இந்த இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு நீர்ப்பாசன சம்பந்தமான அநுபவமும் ஞானமுங் கிடையாது. இவ்வதிகாரிகள் அடிக்கடி மாற்றப்பட்டு வருவதால் ஒரு பிரதேச சம்பந்தமான நீர்ப்பாசன பிரச்னைகளைத் தெரிந்து கொள்வதற்கு ஊக்கமுமில்லை. ஆகையினால் நீர்ப்பாசன விஷயத்தில் ரிவினியு இலாகாவை சம்பந்தப்படுத்துவதினால் வீண் காலதாமதத்திற்குக் காரணமாகிறதே தவிர குடிகளுக்குப் பிரயோசனம் யாதொன்றுமில்லை. இது சம்பந்தமான முழுப் பொறுப்பையும் மராமத்து இலாகாவிடமே ஒப்புவித்து விடுவதே குடியானவர்களுக்குச் சௌகரியமாய் இருக்கும்.

B. ரிவினியுபோர்டாரின் நிலையானஉத்திரவு 88 B மூலம் மாராமத்து இலாகாதார் அனுப்பும் எஸ்டிமேட்டுகளைப் பரிசீலனை செய்யும் சில பொறுப்புகளை ரிவினியு இலாகாவுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்திரவின் அடிப்படையான **கொள்கை** மிகத்தவறானது. புதிதாக புன்செய் நிலங்களை நன்செய் சாகுபடிக்கு கொண்டுவரும் நோக்கத்துடனல்லாமல் மற்றைய பாசன ஆதாரங்களுக்கு அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்தால் அப்பாசன ஆதாரத்தின் மூலம் ஜலம் சரிவரபாயாமலும் சர்க்கார் தாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் சரிவர செய்ய முடியாமலிருக்கும் ஒருவித காரணத்தை முன்னிட்டுத்தான்செய்யவேண்டிவரும். இப்பேர்பட்ட அபிவிருத்திக்குச் சில வாகுப் தொகைக்குப் பிரத்தியேகமாக 6% வட்டி லாபம் கிடைக்குமா என்று பார்ப்பது நியாயமுமல்ல முறையுமல்ல. இந்த உத்திரவில் Productivity என்ற பதத்திற்கு 'சர்க்கார் ஆதாயம்' என்கிற அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கேயாவது ஆயிரம் ரூபாய் செலவழித்து அதன் மூலம் 2000 கலம் அதிக மகசூல் குடியானவர்களுக்கு கிடைப்பதாயிருந்தால் இந்த உத்திரவுப்படி அபிவிருத்தி செய்ய முடியாது. இந்த உத்திரவினால் குடியானவர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தையும் அநியாயத்தையும் ருஜுப்பிக்க அநேக திருஷ்டாந்தங்கள் சொல்லமுடியும். இந்த உத்திரவை ரத்து செய்வதின் காரணமாகவே தஞ்சை ஜில்லாவில் மட்டும் ஒரு லக்ஷம் கலம் அதிக மகசூல் கிடைக்கக் கூடும் என்பது என் அபிப்பிராயம்.

C. கலிமதகிலிருந்து உள்வாய்க்கால்வழியாய் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளும் பொறுப்பைக் குடியானவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாம் செய்யவேண்டிய கடமையைச் செய்து விட்டால் குடியானவர்கள் எக்கேடு கெட்டுப்போகட்டும் என்பதுதான் சர்க்காரின் அடிப்படையான கொள்கை என்று தோன்றுகிறது. தஞ்சை ஜில்லாவில் ஒவ்வொரு பாசன வாய்க்கால்களையும் வருஷா வருஷம் வெட்டிச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பது ஒவ்வொரு குடியானவர்களுக்கும் சந்தேகமின்றித் தெரிந்த விஷயம். ஒவ்வொரு கிராமத்திலும் பல குடியானவர்கள் இருப்பார்கள். எல்லாக் குடியானவர்களும் ஒன்று சேர்ந்தால்தான் இந்த வேலையைச் செய்யமுடியும் என்பதும் நிதர்சனம். அநேக இடங்களில் ஒரு வாய்க்கால் இரண்டுக்கு மேற்பட்ட கிராமங்களுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் அநேக கிராமத்துக் குடியானவர்களை ஒன்றுசேர்த்து வேலை செய்யச் சொல்வது மிகவும் துர்லபம். குடியானவர்கள் இந்தப் பொறுப்பைச் சரிவரச் செய்யும்படி நிர்ப்பந்திக்க 1858-ம் வருஷத்தில் குடி மராமத்து ஆக்ட் என்று ஓர்சட்டம் செய்யப்பட்டது. இந்தச்சட்டத்தை அமுல் நடத்துவதென்பது சாத்தியமான காரியமல்ல. ஆகையால் கிராமத்தில் செய்ய வேண்டிய குடிமராமத்து வேலைகள் சரிவரச் செய்யப்படுவதில்லை என்பது சர்க்காருக்கு நன்றாய்த்தெரியும். ஆயினும் இந்த சட்டத்தை அநுபவசாத்திய முறையில் திருத்தியமைக்கச் சர்க்காருக்கு ஏனோ மனம் வரவில்லை இந்தச்சட்டத்தையொட்டி ரெவினியு போர்டார் அநேகம் உத்

திரவுகள்பிறப்பித்திருக்கின்றனர். ஆனல் ஒன்றும் அநுபவ சாத்தியமில்லை. இக்காரணத்தை முன்னிட்டு இச்சட்டமும், உத்திரவுகளும் அமுலுக்குக் கொண்டு வரப்படவேயில்லை. இந்த உத்திரவுகளின் பிரயோகத்தை விவரித்தல் வெகு தமாஷாக இருக்கும். குடியானவர்கள் தங்களால் இயலாமல் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து வாய்க்காலைச் சீர்திருத்தப் செய்ய வேண்டுமென்றல் தாசில்தாருக்கு மனுச் செய்துகொள்ள வேண்டும். இந்த மனு ரெவினியு இன்ஸ்பெக்டருக்கு அனுப்பப்படும். ரெவினியு இன்ஸ்பெக்டர் பார்வையிட்டு, 'வாய்க்காலைச்சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம்' என எழுதுவார் தஞ்சை ஜில்லாவில் எல்லா வாய்க்கால்களும் மராமத்திலாகாவின் பார்வையில் இருப்பதால் தாசில்தார் டெப்டிகலெக்டருக்கு தெரிவிக்கவேண்டும். டெப்டிகலெக்டர் இன்சினியருக்குத் தெரிவிக்கவேண்டும். பின் மராமத்து இலாகாவில் உதவி இன்சினியர், ஓவர்சியர், மேஸ்திரி இவர்களிடம் படிப்படியாய் வந்து மறுபடி படிப்படியாய் ஏறவேண்டும். பின் இன்சினியர் டெப்டிகலெக்டருக்குத் தெரிவிக்க வேண்டும். டெப்டிகலெக்டர் தாசில்தாருக்கு உத்திரவு அனுப்ப வேண்டும். தால்தார் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு தாக்கீது அனுப்பவேண்டும். பின் கிராம முன்சீப் ஒவ்வொரு குடியானவனுக்கும் சட்டப்படி நோட்டீஸ் கொடுக்கவேண்டும். இந்த நோட்டீஸை எத்தனை வருஷமானலும் சட்டப்படி சார்வு செய்ய முடியாது. இப்படிக்கு நிராட்சேபனையாயும், நிதர்சனமாயும் வருடாவருடம் செய்ய வேண்டிய வேலைக்கு இவ்வளவு சடங்குகள் செய்யவேண்டியிருக்கிறது. இந்த நோட்டீஸ்படி சில குடியானவர்கள் வேலை செய்து விடுகின்றனர்; சிலர் வேலை செய்யவில்லை என வைத்துக் கொள்வோம். அப்படிக் குறை கடந்த வேலையை யார் செய்வது; எப்படிச் செய்வது; எந்தத் தொகையைக் கொண்டு செய்வது என்ற முக்கியமான பிரச்னைகளைப்பற்றி ஓர்விதமான உத்திரவும் கிடையாது. உத்திரவில் என்னமோ இந்த விஷயத்தை ஒவ்வொரு தாசில்தாரும் வெகுகவனமாய் கவனிக்கவேண்டுமென்றும் அநேக ரிஜிஸ்தர்கள் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் என் அநுபவத்தில் எந்தத்தாசில்தாரும் இந்தவேலையை கவனித்ததாகவும் தெரியவில்லை, எங்கேயாவது சட்டப்படி அமுல் நடத்தினதாகவும் தெரியவில்லை. இந்தக் குடிமராமத்துவேலை சரிவர நடத்தமுடியாமலிருப்பதால்மட்டும் 25% குடியானவர்களுக்கு மகசூல் நஷ்டமாகிறது என்பது என் அபிப்பிராயம் இக்கஷ்டத்தை நிவர்த்திப்பது வெகு சுலபமென நினைக்கிறேன். எந்தவேலையாயினும் பல பேர் சேர்ந்து செய்யவேண்டியிருந்தால் செய்யாதவர்களைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கும் சக்திவாய்ந்த சட்ட பூர்வமான பொது ஸ்தாபனம் வேண்டுவதவசியம். ஆகையால் இப்பேர்ப்பட்ட பொது ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதனிடம் இந்த வேலையை ஒப்புவிக்க வேண்டும். அல்லது சர்க்காரே வேலை செய்துவிட்டு குடிகளிடம் செலவை வசூலித்துக் கொள்ளவேண்டும். இந்த இருவழியைத் தவிர வேறுவழி கிடையாது. அப்படி இருக்க இதுவிஷயமாய் சர்க்கார் ஒருவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாதது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

## 2-3 விதைகள் பசுந்தாள்

நெல் விதை, பசுந்தாள் விதை இவைகள் வெகு காலமாக சர்க்கார் பண்ணைகளிலிருந்தும், இதர இடங்களிலிருந்தும் சர்க்கார்செலவில் தருவிக்கப்பட்டு, விவசாய டிமான்ஸ்ரேட்டர்மூலம் குடியானவர்களுக்கு விநியோகிக்கப் படுகிறது. சென்ற பசலியில் டிமான்ஸ்ரேட்டர் மேற்பார்வையில் சிற்சில பண்ணைகளில் நெல்விதைதயாராகி அந்தந்தக் குடியானவர்களைக் கொண்டு விநியோகிக்கப்பட்டு வந்தது. பசுந்தாள் விதைமட்டும் இப்படித் தயாரிக்கப்படவில்லை. இவ்விதைகள் பெருவாரியாக வியாபிக்காமலிருப்பதற்குப் பணமுடை காரணத்தைக்காட்டிலும் போக்குவரத்துக் கஷ்டமே முக்கியமானது. சர்க்கார் விவசாய இலாகா

ஒன்று இருப்பதென்பதே பல குடியானவர்களுக்குத் தெரியவராது. இந்த விதைகள் பெருவாரியாக உபயோகப்படுத்தப்படவேண்டும் என்றால் ஒவ்வொரு கிராமத்திலும், இவைகளை உற்பத்திசெய்து அந்தந்தக் கிராமங்களில் விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படி ஏற்பாடு செய்வதில் கொஞ்சமும் கஷ்டமில்லை. இப்பொழுது கிராம உத்தியோகஸ்தர்களுக்குப் போதுமான வேலை கிடையாது. இவர்களுடைய காலங்களை சரிவர உபயோகப்படுத்திக்கொண்டால் விவசாயத்தை முன்னேற்றமடையச் செய்யக் கூடும்.

### 4. கிராம ஸ்தாபனம்

விவசாய இலாகாவின் பிரசாரம் வியாபித்து பரிமளிக்காமலிருப்பதற்கு மூல காரணம் ஒவ்வொரு கிராமத்திலும் தினசரிவேலை செய்யக்கூடிய ஒருஸ்தாபனம் இல்லாமலிருப்பதே. விதைகளை விநியோகப்படுத்துவது மட்டுமல்லாமல் இவைகளைத் தகுந்த முறையில் சேகரிப்பது, விவசாயக்கருவிகளை வாங்கி விநியோகிப்பது, பொருள் பெற்ற கருவிகளை வாங்கி வாடகைக்குவிடுவது, பாசன ஜலத்தை விநியோகித்தல், குடிமராமத்து, கிராம சிப்பந்திகள் அவர்களுடைய மானியங்கள் இவைகளைக் கண்காணித்தல், சமுதாய நிலங்களை விருத்திசெய்தல் முதலிய விவசாய சம்பந்தமான பல்வேறு பொதுக்காரியங்களைக் கவனிப்பதற்கும் சர்க்காரின்பல்வேறு இலாகாக்களுக்கும் குடியானவர்களுக்கும் பிணைப்பு ஏற்படுத்தி கஷ்டநிஷ்டூரங்களைப் பரிமாறிக்கொள்ளவும் ஒருசட்ட பூர்வமான பொதுச்சங்கம் அமைத்தால் இன்றியமையாத சாதனமாகும். இந்தச் சங்கம் கூட்டுறவு முறையில் இருக்கவே கூடாது. ஏனெனில் கூட்டுறவுச் சங்கங்கள் அதில் சேர்ந்த நபர்களைத் தான் இணைக்கமுடியும். பொதுவாக எல்லாக் குடியானவர்களையும் இணைக்க முடியாது. இந்தச் சங்கங்களுக்கு கிராம உத்தியோகஸ்தர்களே காரிய தரிசிகளாயிருக்கவேண்டும். இப்பேர்பட்ட ஒரு சங்கம் இல்லாவிடில் கிராம முன்னேற்றத்தைக் குறித்துச் செய்யும் எந்தவேலையும் பரிமளிக்காது. அதைக் குறித்துச் செய்யும் செலவும் பயன் கொடுக்காது என்பது என்னுடைய தீர்மானமான அபிப்பிராயம்.







## அறிவிப்பு.

சந்தாதாரர்கள் விலாச மாற்றங்களை அவ்வப்போது பாரதமணி காரியாலயத்திற்கு அறிவித்துவிடக் கோருகிறோம்.

மானேஜர்.

# AMRUTANJAN LIMITED.

Notice is hereby given that the Seventh Ordinary General Meeting of the members of the above Company will be held at "Sri Bagh", Luz, Mylapore, Madras, on the 7th August, 1943, at 8-30 A. M.

The transfer books of the company will be closed from 24th July to 7th August, 1943, both days inclusive.

(By order of the Board)

For K. Nageswara Rao & Co.,
**M. RAMACHANDRA RAO,**
Managing Partner, Managing Agents.


வழக்கமான ரேட்டில் ஸிவிலியன்களுக்கு
வழங்கப்படும் எங்கள் லைப் பாலிஸிகள்
மூலம்

## யுத்த அபாயத்திற்கு

பாதுகாப்பளிக்கிறோம்.

## நாஷனல் இன்ஷ்யூரன்ஸ்

**கம்பெனி, லிமிடெட்,**

7, கௌன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

*மதராஸ் பிராஞ்சு :*

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங், எஸ்ப்ளனேட், மதராஸ்.

# மாந்தம்

டாக்டர், ஆர். கிருஷ்ணமூர்த்தி, எல். ஐ. எம்.

மறுநாள் காலை 7-மணி இருக்கும். மாமா வழக்கப்போல் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தெருத்திண்ணையில் உட்கார்ந்திருந்தார். வாசலோடு குப்பன் என்கிற கிழவன் போய்க்கொண்டிருந்தான். அவனுடன் 4-வயதுப்பையன் ஒருவன் மெதுவாக நடந்து போனான். குப்பனைப்பார்த்தவுடன் மாமாவின் மனதில் அவனிடம் ராமுவைப்பற்றி ரகசியமாக விசாரிக்கவேண்டும் என்ற ஓர் எண்ணம் தோன்றியது.

**மாமா:** என்டாப்பா! யார்போறது?

**குப்பன்:** எஜமான்! எப்போவந்தீங்க. கண்டு ரொம்பநாளாச்சே. சௌக்யமா இருக்கீங்களா ? ஊருலே எல்லாரும் சௌக்கியந்தானுங்களே?

**மாமா** சௌக்யந்தாண்டா குப்பா. அதிருக்கட்டும்; இந்த ஊரிலே உங்களுக்கெல்லாம் உடம்புக்கு வந்தா என்ன செய்வீங்க? இங்கே டாக்டர் எங்கே இருக்கிறார்?

**குப்பன்:** எங்களுக்கெல்லாம் டாக்டரே வேண்டாங்க.

**மாமா:** ஆனல் உங்களுக்கெல்லாம் வியாதியே வாராதா? ரொம்பத் தேவலையே!

**குப்பன்:** அப்படி இல்லீங்க எஜமான். எங்களுக்கும் வியாதி வரும். வந்தா சட்னுபோயிடும். சாதாரணமா வெட்டுக்காயம், ஜுரம், பேதி, இப்படித்தான் வரும். அதுக்கெல்லாம் நம்ப குழந்தை இருக்கிறதே ராமு, யஜமானோட அக்கா மவன், அவங்க கொடுக்கிற மருந்தே போருங்க. அவங்க நல்லாயிருக்கணம். எப்போ போனலும் இல்லேங்கிறது இல்லை. ஏதோ கொடுக்கிறுங்க. பழுது ஒண்ணுகூட இல்லீங்க. இந்தப் பையன் பொழுச்சதே அவங்களாலேதான். எங்கிட்டே ரூபா இருந்தா படி நிறையக் கொடுப்பேனுங்க. நேத்திக்கித்தான் ஏதோ ஒரு மூட்டை உளுந்து கொடுத்தேன். அதான் என்கையிலே கிடைச்சதுங்க.

**மாமா:** அந்தப் பையனுக்கு என்னடா உடம்பு வந்தது?

**குப்பன்:** ஒண்ணுமில்லீங்க. ராத்திரி நல்லா இருந்தது. கோழி கூவுற சமயங்க. அப்ப என்னன்னு குழந்தைக்கு-இப்ப நினைச்சாகூட பயமா இருக்குங்க-கை, கால், மூஞ்சி, வாய் எல்லாம் கோணக் கோண இழுத்தது. கண் மேலேயே பாத்துதுங்க. கைகால் ஜில்லுன்னு போச்சு. வீட்டுலே எல்லாரும் அழ ஆரம்பிச்சுட்டாங்க. தெரு ஜனங்க எல்லாரும் எங்க வீட்டிலே கூடிட்டாங்க. புள்ளெ போச்சுன்னே நினைச்சுட்டோம். அப்பறம் மகராஜா அவங்ககளாப் பாத்து உசிர்ப்பிச்சை கொடுத்தாங்க.

**மாமா:** அப்படியா? சரி. நீபோயிட்டு வா.

பட்டிக்காட்டு ஜனங்களுக்கே புத்தி கிடையாது. ஒருமூட்டை உளுந்து கொடுத்தானமே. ஒருரூபா இரண்டு ரூபா கொடுத்தால் போதாதா? அவனுக்கு என்ன, என்னமோ கொஞ்சம் மருந்து தெரிந்துகொண்டு வேஷம் போடுகிறான். ஏதாவது ஆப்ரேஷன் பண்ணத் தெரியுமா என்ன அவனுக்கு!

இவ்விதம் எண்ணிக்கொண்டே வைத்தியசாலைக்கு வந்துசேர்ந்தார் மாமா.

ராமு: என்ன மாமா ரொம்ப லேட் இன்னிக்கு? நீங்க என்ன; ஒரு ஆபீஸர். உங்க ஆபீசுக்கு நீங்க இஷ்டப்படி லேட்டாகப் போகலாம். இப்போ மணி 10. ஆஸ்பத்திரி மூடுகிற நேரம் வந்துவிட்டது. நீங்க ரொம்ப நாழி அந்தக்குப்பனோடு பேசிக்கொண்டு இருந்துவிட்டேள். அவனோடு நீங்க பேச ஆரம்பிக்கும்பொழுதுதான் நான் அந்த வழியாகவந்தேன்.

மாமா: அவன் என்ன உனக்கு ஒரு மூட்டை உளுந்து கொடுத்தானாமே! நிஜமாவா!

ராமு: இந்தஆட்களெல்லாமே அதிகமாகப் பொய் சொல்வதில்லை. வயிற்றுக்கு இல்லை என்றால் ஏதோ பொய்யைச் சொல்லுவார்கள்.

மாமா: நாழி ஆய்விட்டது. இதை மட்டும் சொல்லு. குப்பன் பேரனுக்கு என்ன உடம்பு?

ராமு: அதைத்தான் மாந்தம்என்பது.

மாமா: மாந்தமா! அவன் சொன்னதைப் பார்த்தால் என்னமோ வலிப்பு மாதிரி இருந்ததே.

ராமு: உங்களுக்கெல்லாம் பணக்கார வியாதிதான் உடனே ஞாபகம் வருகிறது. ஏழைகளுக்கு இது அதிகமாக வருவதே இல்லை. அதுவும் குழந்தைகளுக்கெல்லாம் அஜீர்ணம் வரும். சரியாகக் கொல்லைக்குப் போகாது. அதனாலே ஜுரம் அதிகமாக வரும். 105 டிகிரி கூட இருக்கும். குழந்தைகளுக்கு அதிக ஜுரம் வந்தால் கைகால்கள் இழுக்கும். அவ்வளவுதான். இது முக்கியமாக அஜீர்ணத்தினாலேயே வருகிறது. ஆனால் நீங்கள் சொன்ன வலிப்பு ஒரு பெரிய வியாதி. ரொம்பநாள் மருந்து சாப்பிடவேண்டும். நரம்பைப்பற்றியும், மனதைப்பற்றியும் வருகிற வியாதி அது. ஒருபெரிய விசேஷம் என்னவென்றால் ரொம்ப நாகரீகமாக இருக்கிற வீடுகளிலேதான் இது அதிகம். இந்தப்பட்டிக்காட்டு ஆட்களுக்கு இதெல்லாம் வராது. தினம் பட்டினி கிடக்கிறவனுக்கெல்லாம் இது வராது. அபூர்வம்.

மாமா: மாந்தம் என்றாயே, அதற்கு என்னசெய்தாய்? சொல் கேட்போம்.

ராமு: அந்த வியாதிக்குக் கெடுதல் குடலிலேதான் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன் அல்லவா! அதனாலே முதலில் பேதிக்குக் கொடுக்கவேண்டும். உடனே பிரயோஜனம் இருக்கவேண்டும். அதற்குத்தான் எனிமா என்பது கொடுப்பது.

மாமா: சோப் ஜலமா? எவ்வளவுஜலம் விடுகிறது?

ராமு: சோப் ஜலம் ஜுரம் இருக்கும்போதும், பிரக்ஞை இல்லாதபோதும், குழந்தைகளுக்கும் கொடுப்பதில்லை. **கிளிஸ்ரின் எனிமா** என்பது ஒன்று. அதாவது, கால் அவுன்ஸ் கிளிஸரின் முக்கால் அவுன்ஸ் ஜலம் கலந்து சிறியதொரு குழாய் • அதற்கென்று இருக்கிறது. அதன் மூலம் ஆஸனம் வழியாகக் குடலில் செலுத்தி விடுகிறது. 10 நிமிஷத்திற்குள் ஒருமுறை கொல்லைக்கு போகும். உடனே இழுப்பு குறையும்.

மாமா: Supository என்பதுஎன்ன? குழந்தைகள்வெளிக்குப்போகாமல்போனால் உபயோகிப்பது வழக்கமாயிற்றே.

ராமு: உங்களுக்குப் பாதிவைத்தியம் தெரிந்து இருக்கிறது. சௌகரியத்தின் பொருட்டு சில கம்பெனிகள் கிளிஸரின், மெழுகு, சோப் எல்லாம் சேர்த்து மெல்லியதாக ஒரு விரல்போல உருட்டி டஜன் டஜனாக ஒருபாட்டிலில் போட்டு நல்ல லேபிள் ஒட்டி அந்தப் பாட்டிலை ஒருபெட்டியில் வைத்து **அந்தப்** பெட்டியின்மேல்பளபளவென்ற **காகிதம்** ஒட்டி

டது. கொலையாளிகளே! தாசி மனோரஞ்சிதத்தைக் கழுவிலேற்றி விடுங்கள்.

**தாசி:** மன்னவா! ஒரு விண்ணப்பம். நான் அவ்வழியே போக நேரிட்டதின் காரணத்தைத் தெரிந்து கொண்டு பின்பு என்பேரில் குற்றமிருந்தால் என்னை தண்டிக்கலாம்.

**அரசன்:** என்ன? சொல் சீக்கிரம்.

**தாசி:** பழனி என்ற தட்டானிடம் நான் புல்லாக்கு செய்யக் கொடுத்து மாதக்கணக்காக ஆகிவிட்டது. அவன் சால்ஜாப்புக்கு மேல் சால்ஜாப்பாகச் சொல்லி என் ஆட்களை கால் ஒடியவைத்தான். அவனை நேரில் கண்டு என் நகையை வாங்கிவர நான் அங்கு செல்ல நேர்ந்தது. அப் பாவியால் என் உயிருக்கே அபாயம் நேர்ந்துவிட்டது! நான் என்ன செய்வேன்! என்பேரில் தப்பிதமா; அந்தக் கடன்காரப் பாவிபேரில் தப்பிதமா?என்றுபார்த்து தண்டனைவிதிக்கவேண்டும். தட்டாரப் பழனி என் புல்லாக்கை அப்பொழுதே கொடுத்திருந்தால் நான் அவ்வழி சென்றிருக்கமாட்டேன். சேறு குழைப்பவர்கள் என்னைப் பார்த்திருக்க மாட்டார்கள். சேறு கெட்டியாய் இருந்திருக்கும். சுவர்படையும் நழுவியிராது. கன்னம் வைத்தவனும் செத்திருக்கமாட்டான். அவன் பெண் சாதியும் பிராது கொடுததிருக்க மாட்டாள். எல்லா விபத்தும் பழனி தட்டான் மூலமே எற்பட்டது.

**அரசன்:** மாதே! உன் வாக்கு மூலம் நியாயமானதே. சந்தேகமில்லை. இக்கொலைக்குக் காரணம் பழனி என்கிற தட்டான்தான், சேவகர்களே ! பிடித்து வாருங்கள் அவனை.

தட்டான் கொண்டுவரப்பட்டதும் அவன்பேரில் குற்றம் ருசுவாகிவிட்டது. அரசன் அவனைக் கழுவிலேற்ற உத்திரவு போட்டான். பழனித்தட்டான் கழுமரத்திற்குக் கொண்டு போகப்படும் போது பட்டணம் கூடிவிட்டது. அரசனும் புடைசூழக் கழுமரத்தடி வந்து சேர்ந்தான். அப்பெருங் கூட்டத்தில் பழனி தனக்குக் கடன்கொடுத்து வட்டி வாங்கி அதிக ஹிம்ஸை செய்துவந்த கோமட்டி ஒருவனைக்கண்டான் கோமட்டி கொழு கொழுவென்று தொந்தியும் தொப்பையுமாக இருப்பான். பழனி இளைத்த சரீர முடையவன். கோமட்டி தன் விபத்தை வேடிக்கையாக நினைத்து கண்காக்ஷி பார்க்கவந்திருப்பதைப் பழனி கண்டு வருந்தினன். அரசனின் சேவகர்கள் பழனியைக் கழுமரத்தண்டையில் இட்டுக்கொண்டுபோய் நிறுத்தினர்கள். பழனி தன் எதிரியான கோமட்டியைப் போல் கொழுகொழு என்றிருக்கும் கழுமரத்தைப் பார்த்து பின்வருமாறு அரசனிடம் தெரிவித்தான்.

**பழனி:** அரசே! இக்கழுவுக்கேற்றவன் அதோ நிற்கின்றனே அந்தக் கோமட்டி தான். சோனியான எனக்கா இது தகுப்? என்றன்.

**அரசன்:** உற்றுப்பார்த்தான். "பழனி சொல்வது சரியாகத்தானிருக்கிறது. சீ! இந்தச் சோனிக்கா இந்தக் கழுமரம்!. சேவகர்காள்!கழுவுக்கேற்ற அக்கோமட்டியை இதில் எற்றுங்கள்!" என்று உத்திரவுபோட்டான். கோமட்டிக்குப் பேச அவகாசம் கிடைக்குமுன் சேவகர்கள் அவனைக் கட்டித்தூக்கிக் கழுவிலிட்டுவிட்டார்கள். மந்திரிகள்"அரசே!கழுவுக்கேற்ற கோமட்டி இவன்தான். தாங்கள் கொலைக் குற்றம் தீர்த்து வைத்தது பொருத்தமாகவே இருக்கிறது" என்று புகழ்ந்தார்கள்

அரசனும் "குற்றவாளி தண்டிக்கப்பட்டான்" என்று திருப்தியாக அரண்மனை போய்ச்சேர்ந்தான்.

குழந்தைகளே! அரசன் நியாயம் தீர்த்தது சரியா; சரியில்லையா? நீங்களே யோசித்துப் பாருங்கள்.

## தென்னை மரம்—नालिकेरम्

ராமநாத சர்மா

**நிழல்:** ஒவ்வொரு கிராமத்திலும் விசேஷமாக தென்னைமரம் காணப்படும். சில இடங்களில் தோப்புகளாகவும், சாலைகளில் நிழலுக்கென்று வரிசைகளாகவும், மற்றும் சில இடங்களில் வீட்டின் முன் பக்கங்களிலும் தென்னைமரம் வைத்துப் பயிராக்கப்படுகின்றன. வரிசையாக நிற்கும் தென்னை மரத்தைப்பார்ப்பதே மனதிற்குளர் இன்பத்தையும், குளிர்ச்சியையும் கொடுக்கும். இந்தக் காட்சியை வெய்யில் வேளையில் அதிகமாக அநுபவிக்கலாம்.

**இளநீர்:** இளநீர் வெகு குளுமையானது. இதைச்சாப்பிட, மூத்திரத்தில் உண்டாகும் எரிச்சல் தீரும். மூத்திரம் அதிகமாக உண்டாகும். வைசூரியில் இளநீர் சாப்பிடுவது வழக்கம். அப்படிச் சாப்பிடுவதால் வைசூரியினால் உண்டாகும் விஷங்கள் மூத்திரம் மூலமாக சுலபமாய் வெளியாகிவிடும்.

கண்ணில் உபயோகிக்கும் மருந்துகளில் இளநீர் ஒன்று. "நாளிகேராஞ்சனம்" என்பதில் இளநீர் முக்கியமானது.

**தேங்காய்:** நம்முடைய ஆகாரத்தில் தேங்காய் ஒரு முக்கியமானது. முற்றின தேங்காயைத்தின்பதினால் அதனுடைய சக்கை குடலில் உள்ள வாயுக்களை கிரகித்து குடலைத் தன்னுடைய வேலையைச் செய்யும்படித் தூண்டும்.

**எண்ணெய்:** தேய்த்து ஸ்நானம் செய்ய உடம்பிற்கு அதிகப்பளபளப்பும் மேனியும் கொடுக்கும். தேங்காய் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது மலையாள தேசத்தில் வழக்கம்.

சிரங்கு முதலிய தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்குத் தேங்காய் எண்ணெயில் அருகம்புல் சார்விட்டுக் காய்ச்சின தைலம் மிக உபயோகமுள்ளது.

கொட்டாங்கச்சியிலிருந்து ஒருதைலம் வடிப்பது உண்டு. நமைச்சலுடன் கூடிய படைகளுக்குச் சிறிது தடவ ரணமாகி ஆறித் தோலுரிந்து சௌகரியப்படும்.

**கள்:** தென்னங்கள் அதிகமாக உபயோகித்தால் போதையைத்தரும். மிதமாக உபயோகித்தால் அதிக குளுமையானது. அப்பொழுதுதான் இறக்கின கள்ளை ஒரு அவுன்ஸ் அளவு கக்குவான் உள்ள குழந்தைகளுக்குக் கொடுக்க அதில் குணம் இருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

**வெல்லம்:** கள்ளைப்போலவே வெல்லமும் வெகு குளுமையானது.

## பனை மரம்—तालम्

**பனை விரல்:** பனைமரத்தில் இருவகையுண்டு—காய்ப்பது, காய்க்காதது. காய்க்காத மரத்தில் உள்ள பனைவிரல் அல்லது பூ குழந்தைகளுக்கு வரும், கட்டி (Enlargement of Liver) வைத்தியத்தில் உபயோகமாகும். பனைவிரலாதி க்ஷாரத்தில் அது முக்கியமானது.

**வேர்:** பனைவேர் போட்டுக் கொதிக்க வைத்த ஜலத்தை அடிக்கடி சாப்பிடுவது விஷபேதிக்கு நல்ல மருந்து என்று சிலர் கூறுகின்றனர்.

**கள், வெல்லம்:** பனங் கள்ளும் வெல்லமும், தென்னங்கள் வெல்லம் போலவே குணமுள்ளவை.

**கற்கண்டு:** பனங்கற்கண்டு உடம்புக்கு வெகு குளுமை. இதை பாலில் போட்டு படுக்கும்பொழுது சாப்பிடக் குழந்தைகளுக்குக் கணைச்சூடு தீரும். குளுமைக்காகச் சிலர் இதை வெறும் வயிற்றில் வெந்நீரில் போட்டு அதில் கொஞ்சம் நெய் சேர்த்துச் சாப்பிடுவதுண்டு.

[8-ம் பக்கத் தொடர்ச்சி]
வளர்ச்சிக்கும் கிறிது இடம் கொடுக்கும் பாவனையாகத் தனிமனிதர்களுடைய சுதந்திர உரிமைகளும் பொதுவிலுள்ள பொறுப்புக்களும் பாகுபாடு செய்யப் பட்டு பலவேறு ஹாத்துக்கள் பிறந்தன. இப்படி ஜ்வாலை பரவாதிருக்கக் கட்டைகளைக் குவித்துத் தடை செய்வதேபோல் சோம்பலுக்கு அடிமைப்பட்டு, விட்டுக் கொடுத்த சிலஉரிமைகள் பேராசையான பெருந்தீயை எழுப்பி எல்லோரையும் தகிக்க ஆரம்பித்துவிட்டது.

**பரஞ்:** நன்ருக விளக்குகிறீர்கள். இவ்விதமெல்லாம் ஏற்பட ஆரம்பத்தில் சிலபேர்களிடமிருந்து கவனக்குறைவினல் ப்ரத்யுபகாரமாகிய வேலையைப் பெருமலிருப்பதுடன் மேலும் மேலும் தங்கள் கடமைகளைப் பிறனெருவன் செய்யப்பார்க்காமல் வாளாவிருந்ததும் அரசாங்கத்தின் பெருங்குற்றமே. அரசாங்கந்தான் குற்றவாளி. சோம்பல் குற்றம். ஆகினும் தப்பிதம் திருத்தப் படக்கூடாதா?

**ஆறு:** கூடும். இதற்கே எல்லாத் தொண்டர்களும் பாடுபடுகிருர்கள். சோம்பல் கொடிய அரக்கன். எல்லா வகையிலும் இதையழிக்க வேண்டும். இதன் ஆயிரம் தலைகளும் அறுக்க அறுக்கத் துளிர்விடும் தன்மையன. ஆகவே ஞானமாகிறகத்தியினல் சேதித்துவரும் பொழுதே த்யாகமென்கிற அக்னியினல் தீய்த்துவர வேண்டும். இதைப் பற்றி விஸ்தாரமாக அறிய வேண்டுமானல் பிரிதொரு சமயம் ஆராய்ச்சி செய்வோம் "தவறுதலும் தண்டனையும்" என்ற விஷயமாக.

## மதிப்புரை

[சோவியத் செந்சேனை. எழுதியவர்: கே. ராமநாதன். வெளியீடு: நவ சக்தி காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை அணு **4.**]

**சோவியத்** ரஷ்யா உயர்தரக் கற்பனைக்கும் எட்டாத ஒரு சமதர்ம நகரம், சுதந்திர நாடு. நவ உலகம். அந்த மண்ணிலே முளைக்கும் புல் பூண்டுகள் கூட இயற்கையால் வெய்யில் தாங்காது உலர்ந்து படும் தறுவாயிலும் தேச சேவை என்ருல் புது ஜீவன் பெற்றுச் செழித்துத் தலைதூக்கி நிற்குமாம். அத்தகைய நாட்டிலே இன்று நடந்து கொண்டிருக்கும் யுத்தத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் புது சாதனங்கள், மக்கள் அனைவரின் சுயநலமற்ற தேசத் தொண்டின் ஊக்கம், அவர்களின் வீரச் செயல்கள் முதலியவைகளைப் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப் பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் **"புரட்சியில் பூத்தபடை"** என்ற தலைப்பின்கீழ் **'சோவியத் யூனியன்!' 'சுதந்திர மணிக்கூண்டு!'** என்ற வார்த்தைகளைப் பார்க்கும்போதே நம் உள்ளத்தில் சுதந்திர உணர்ச்சி உண்டாகிறது. புத்தகத்தைப் படிப்பதில் ஆர்வம் அதிகரிக்கிறது. படித்து முடித்ததும் சோவியத் நாட்டையும் அங்குள்ள ஜனங்களையும் மனமாற வாழ்த்துகிறோம். நம்மையும் நமது தேசத்தையும் அந்த உன்னத நாட்டுடன் ஒப்பிடத் தூண்டுகிறது உள்ளம். இங்குள்ள தாழ்வுகளைக் களைந்து மேன்மைகளைப் புகுத்தும் ஆர்வம் அதிகரிக்கிறது. பிறரிடமுள்ள நல்ல அம்சங்களை சுவிகரிப்பதால் குற்றமில்லை இப்படியே எல்லா பாரத மக்களின் உள்ளமும் எண்ணுகையில் செயலும் பின்னே தொடரும். க்ஷேமம் உண்டு—என்ருவது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இம்மாதிரியான புத்தகங்களை மனப் பூர்வமாக வரவேற்க வேண்டியதே. இதில் மற்ருெரு விசேஷம்: சுதந்திர நாட்டின் சரித்திரச் சுருக்கம் கையால் தயாரித்த காகிதத்தில் அச்சிடப் பட்டிருப்பதுதான். இதை நாம் போற்றுகிறோம். **கீரன்**

Edited & Published by K. S. Venkataramani. at No. 45, Mahadana Street, Mayavaram. printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Pres 29, Mahadana Street, Mayavaram.